# உதயன்

விலை ரூபா 7.00

கதிர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 27 செவ்வாய்க்கிழமை (11-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:105


### கப்டன் உட்பட பதினொரு போராளிகள் உயிரிழப்பு

# கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கி அழிப்பு!

## சர்வதேசக் கடற்பரப்பில் தங்களின் வர்த்தகக் கப்பலை காரணம் ஏதுமின்றி மூழ்கடித்ததாகப் புலிகள் கடுஞ்சீற்றம்

கொழும்பு,மார்ச்11

**திருகோணமலைக்குக் கிழக்கே ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படை நேற்று முற்பகல் தாக்கி அழித்தது.**

**சர்வதேசக் கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த தங்களது வர்த்தகக் கப்பல் ஒன்றையே - எதுவித காரணமும் இன்றி - இலங்கைக் கடற்படை தாக்கி அழித்தது என்று கடும் சீற்றத்துடன் குறிப்பிட்டிருக்கின்றனர் புலிகள்,**

**ஆனால், இலங்கைக் கடல் எல்லைக்குள் புகுந்த புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றையே தாங்கள் தாக்கி அழித்ததாகக் கடற்படை அறிவித்திருக்கின்றது.**

நேற்று முற்பகல் 10 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

இலங்கையின் கடல் எல்லைக்கு அப்பால் - சர்வதேசக் கடற்பரப்பில் - திருகோணமலையில் இருந்து 220 கடல் மைல் தொலைவில் இந்தச் சம்பவம் நடந்ததாகப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து 240 கடல் மைல்களுக்கு அப்பால் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று கண்காணிப்புக்குழு பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால், முல்லைத்தீவுக்கு கிழக்கே 185 கடல்மைல் தொலைவில் - இலங்கைக்குரிய கடற்பரப்பிலேயே - இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று இலங்கைக் கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையின் 200 கடல்மைல் எல்லைப்பரப்புக்குள் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததா? அல்லது அதற்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் நடந்ததா? - இதுவே இப்போது சர்ச்சைக்குரியதாகியிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் ஜெயந்த பெரேரா கூறியதாவது:-

ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சென்ற புலிகளின் கப்பலை நிறுத்துமாறு ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் உத்தரவிட்டனர். ஆனால், அந்தக் கப்பல் கடற்படையினரின் எச்சரிக்கையைப் புறக்கணிப்புச் செய்துவிட்டுச் சென்றது. அதனால் கடற்படையினர் அந்தக் கப்பலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனையடுத்து, புலிகளின் கப்பலில் இருந்தும் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கடற்பரப்பில் வைத்து கப்பல் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது

### கண்காணிப்புக்குழு உப தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்11

"புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் சர்வதேசக் கடற்பரப்பில் நடந்துள்ளதால் அது குறித்து அதிதசிரத்தையும், கவனமும், கவலையும் கொண்டுள்ளோம்."

கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் கப்புறுக் ஹொக்லண்ட், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியின் முக்கிய அம்சங்கள் வருமாறு :-

*கேள்வி:-* சம்பந்தப்பட்ட கப்பலில் அது எந்த நாட்டைச் சேர்ந்தது என்பது பற்றிய கொடியோ, அடையாளமோ காணப்படவில்லை என்று கூறப்படுகிறதே?

*பதில்:-* என்னால் அதை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியாது. ஏனென்றால் இலங்கைக் கடற்படை கூறிய தகவல்தான் அது.

*கேள்வி:-* சர்வதேச கடற்பரப்பில் வைத்து கப்பல் ஒன்றை இவ்வாறு தாக்குவது சர்வதேசச் சட்டங்களின் கீழ் ஏற்கக்கூடியதா?

*பதில்:-* இந்தக் கேள்விக்கும் என்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தினால் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு

சர்வதேசக் கடற்பரப்பில் தங்களது வர்த்தகக் கப்பல் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட மோசமான சம்பவம் தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

இன்று (10ஆம் திகதி) திருகோணமலைக்கு 220 கடல் மைல்களுக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து, எமது வர்த்தகக் கப்பல்களில் ஒன்றை இலங்கைக் கடற்படை தாக்கி மூழ்கடித்ததோடு, அதனால் கப்பலில் இருந்த சிப்பந்திகள் அனைவரும் உயிரிழக்க வேண்டியதுமாயிற்று. இந்தச் சம்பவம் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் கைதிகளை விடுவிக்கக் கோரி

## செயலகம் முன்பாக வீதியின் குறுக்கே அமர்ந்து நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

தென்பகுதிச் சிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும், அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ்.செயலகம் முன்பாக நேற்று கண்டி வீதிக்குக் குறுக்காக அமர்ந்திருந்து கூட்டமைப்பினர் ஒருமணிநேர மறியல் போராட்டம் நடத்தினர்.

தமிழக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மறியல் போராட்டம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி ஒரு மணிநேரம் நடைபெற்றது. செயலகத்தின் பிரதான வாயிலின் முன்பாக கண்டி வீதிக்குக் குறுக்காக போராட்டக்காரர்கள் அமர்ந்திருந்தனர். இதனால் கண்டி வீதியூடான போக்

(12ஆம் பக்கம் பார்க்க)



தலைநகர் கொழும்பில் நேற்று பொ.ஐ.மு. மற்றும் ஜே.வி.பி. ஆகியன இணைந்து நடத்திய பேரணியில் ஒரு காட்சி. பத்து லட்சம் பேர் இந்தப் பேரணியில் திரள்வார்கள் என தெரிவிக்கப்பட்டபோதும் ஒரு லட்சம் பேர் வரையிலேயே பேரணியில் கலந்துகொண்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

## தமிழக மீனவர் அட்டூழியங்களை கட்டுப்படுத்தக் கோரி பேரணி

### மன்னாரில் நேற்று நடந்தது

மன்னார் வளைகுடாப் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தமிழக மீனவர்கள் புரியும் அட்டூழியத்தை உடன் தடுக்குமாறு கோரி மன்னார் மாவட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.



ஆயிரக்கணக்கான மீனவர்கள் நகரில் கூடி பேரணியாகச் சென்று செயலகத்தில் மகஜர்களைக் கையளித்தனர்.

இலங்கை - இந்தியப் பிரதமர்கள், தமிழக முதலமைச்சர் ஆகியோ

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை துணைவேந்தராக மோகனதாஸ்

கொழும்பு,மார்ச்11

யாழ்பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் எஸ். மோகனதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என அறியவருகிறது.

கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில பங்குபற்றுவதற்காக வந்துள்ள அவர் ஓரிரு தினங்களில் தமது நியமனக் கடிதத்தைப் பெறுவார் என்றும் - பெரும்பாலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதவி ஏற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகப் பீடாதிபதியாக அவர் தற்சமயம் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3).

## வடக்கு - கிழக்கில் இன்று ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின் பேரில் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக கல்விச் செயற்பாடுகள் யாவும் இன்று முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளை உள்ளடக்கி எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து இன்றைய ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் ஒரே நேரத்தில் சகல மாவட்டங்களிலும் இடம்பெறும்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - இரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
14, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 Years Warranty
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme


# தலைமைப்பதவியில் இருந்து விலகுவதற்கு வக்கார் மறுப்பு

## தன் பதவியில் இருந்து இன்ஸமாம் விலகல்

இஸ்லாமாபாத்,மார்ச்11

கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்குப் பொறுப்பேற்று பதவி விலக அணியின் தலைவர் வக்கார் யூனுஸ் மறுத்துவிட்டார். நேற்று திங்கட்கிழமை லாகூரில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இதனைத தெரிவித்தார்.

அணியின் தோல்விக்கு தலைவரை மட்டும் குற்றஞ்சாட்டுவது நியாயமாகாது. எனவே, நான் தலைமைப் பதவியில் இருந்து விலகக் போவதில்லை என்றார் அவர்.



செய்தியாளர் மாநாட்டில்...

ஆனால், உலகக் கிண்ணத் தொடரில் மிகமோசமாக ஆடிய துணைத் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் தன் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

"இளைஞர் ஒருவரின் கையில் துணைத் தலைவர் பதவியை வழங்க இதுதான் சரியான சந்தர்ப்பம். எனவே துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து நான் விலகத் தீர்மானித்து விட்டேன்" - என்றார் அவர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா கிண்ணத்தை வெல்லும் என்கின்றன பிரிட்டிஷ் பத்திரிகைகள்

சச்சின் டென்டுல்கர் இந்திய அணியின் கோஹினூர் வைரம். அவரால் இந்தியா இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லப் போவது உறுதி. இவ்வாறு பிரிட்டிஷ் பத்திரிகைகள் டென்டுல்கரைப் புகழ்ந்துள்ளன.

தொடர் வெற்றிகளை சந்தித்து வரும் ஆஸ்திரேலியாவை தோற்கடித்து, கிண்ணத்தைப் பறித்து வரக்கூடிய தகுதி இந்திய அணிக்கு மட்டுமே உள்ளது என்று இப்பத்திரிகைகள் வர்ணித்துள்ளன.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் லீக் போட்டியில் தோல்வியுற்ற போது, பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்திய அணியை கடுமையாக விமர்சித்தன.

ஆனால், அதன் பின் இந்தியா தொடர்ந்து வெற்றிபெற்றது. மற்றொருபுறம் ஆஸ்திரேலிய அணி தன்னை யாரும் தோற்கடிக்க முடியாது என்ற

(11ஆம் பக்கம் பார்க்க)




SHARP Action of the day



இலங்கை துடுப்பாளர்களை நேற்று சிதறடித்த இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஜவஹல் ஸ்ரீநாத் பந்து வீசிய பின்னர்... அருகில் சங்ககார.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# சரிவிலிருந்து மீண்டு வருவது மஹேலவிடமே தங்கியுள்ளது

## டேவ் வட்மோர் கூறுகிறார்

"உலகக்கிண்ண போட்டிகளில் தொடர்ந்து மோசமாக விளையாடிவரும் மஹேலஜயவர்த்தன அந்த நிலையில் இருந்து மீண்டு வருவது அவரது கையில்தான் உள்ளது"

- இவ்வாறு இலங்கை அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

25 வயதான ஜயவர்த்தன இந்த உலகக்கிண்ணத்தொடரில் நேற்று வரை 6 இனிங்ஸ்களில் விளையாடி 16 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார்.

இந்நிலையில் மஹேலவின் இந்த நிலையை மாற்ற நானும் பிற உதவிப் பயிற்றுநர்களும் கடுமையான முறையில் உழைத்து வருகின்றோம். அதே சமயம் இந்தச்சரிவில் இருந்து மீளவது ஜயவர்த்தனவின் கையில்தான் உள்ளது என்று வட்மோர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தோல்விக்கு பின்னர் பேட்டியளித்த வட்மோர் இது குறித்து தெரிவிக்கையில் :-

இந்தச்சரிவில் இருந்து மீள்வது அவரது கையில்தான் உள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சமிந்த வாஸ் பாதிரியாராகும் இலட்சியத்தை மாற்றிய 'ஹட்ரிக்'



"பாதிரியார் ஆகுவதே இளம் வயதில் எனது இலட்சியமாக இருந்தது. பாடசாலையில் ஹட்ரிக் ஒன்றைப் பெற்ற நிகழ்வு என்னைக் கிரிக்கெட் துறைக்கு திருப்பியது.

- இவ்வாறு இலங்கை அணி வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் கூறினார்.

ஞாயிறன்று வெளியான தென்னாபிரிக்க பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே வாஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உலகக்கிண்ணத்தொடரில் நேற்று வரை 18 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் (11ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்காவுக்கு கூடுதல் விமான சேவை

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி சுப்பர்சிக்ஸ் முதல் வெற்றியை பெற்று அரையிறுதியில் நுழையும் வாய்ப்பை நெருங்கிக் கொண்டுள்ளது.

எனவே இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்கா செல்லும் கிரிக்கெட் ரசிகர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. இதையடுத்து எப்போதும் இல்லாதவகையில் தென்னாபிரிக்கா ஏர்வேஸ் இந்தியாவுக்கு கூடுதலாக பத்து விமானசேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

லீக் போட்டியின்போது இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்கா சென்ற

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸ்திரேலிய வீரர்கள் வீசும் எதையும் எதிர்கொள்ளத் தயார்

## நியூஸிலாந்து அணித்தலைவர் தெரிவிப்பு



"ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் என்னை நோக்கி வீசும் எதையும் எதிர்கொள்ளத்தயார்"

- இவ்வாறு நியூஸிலாந்து அணியின் தலைவரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமான ஸ்ரீபன் பிளமிங்கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தின் போது இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய ஆஸி. வேகப்பந்து வீச்சாளர் பிரெலீயின் பந்துவீச்சில் காயமடைந்து வெளியேறினார்.

இப்போட்டியின் பின் செய்தியாளர்களிடம் பேசிய ஆஸ்திரேலியா அணித் தலைவர் ரிக்கிபொன்டிங் தமது அணி ஜயசூரியாவை இலக்கு வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார்.

ஸ்ரீபன் பிளமிங்கை வீழ்த்துவதற்கும் இப்பாணியை கையாள்வதற்கு இரு தடவை சிந்திக்க மாட்டேன் என பொன்டிங் கூறியிருந்தார்.

இதற்கு ஸ்ரீபன் பிளமிங் பதிலளித்த போது " போட்டியின் போது அவர்கள் வீசும் எதையும் நான் எதிர்கொள்ளத்தயார்.ஆஸ்திரேலியாவின் தொடர்ச்சியான வெற்றிகளுக்கு சவாலை ஏற்படுத்த காத்திருக்கிறோம்.

ஆஸ்திரேலிய அணி மிகச்சிறப்பாகவே விளையாடுகிறது. ஆனால்,

(11ஆம் பக்கம் பார்க்க)

# மண்டியிட்டது இலங்கை!

மிகச் சிறிய அணிகளுடன் மிகப்பெரிய வெற்றி; கென்யாவுடன் அதிர்ச்சியூட்டும் தோல்வி; பின்னர் மேற்கிந்தியாவுடன் போராட்டத்தின் மத்தியில் வெற்றி; தென்னாபிரிக்காவுடன் இறுதிவரை போராட்டம்; லீக் ஆட்டங்களில் இலங்கையின் பெறுபேறு இப்படித்தான் இருந்தது. 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்கு வந்த பின்னர் அதற்கு என்னவாயிற்று என்று தெரியவில்லை.

ஆஸ்திரேலியாவுடன் படுதோல்வி. இப்போது இந்தியாவுடன் படுபடுதோல்வி. அரையிறுதிக்குள் இனி அவர்கள் நுழைவதற்கு கென்யாதான் மனது வைக்கவேண்டும். எந்த ஓர் ஆட்டத்தையாவது கென்யா வென்றுவிட்டால் இலங்கை நாடுதிரும்ப வேண்டியது தான்.

இவர்கள் ஏன் திடீரென இப்படியானார்கள் என்பதற்கு எந்த கிரிக்கெட் வல்லுநரிடமும் பதில் இல்லை. அதேபோல் எப்படி இந்தியர்கள் திடீரென வீறு கொண்டு எழுந்தார்கள் என்பதற்கும் பதில் இல்லை.

1996 உலகக் கிண்ணப் போட்டியின் போதும் இந்திய அணியிடம் இலங்கை மோசமாகத் தோற்றிருந்தது. நேற்று மீண்டும் அதைவிட படுமோசமான தோல்வி.

முதல் தவறு ஜெயசூரிய செய்தது. நாணயச் சுழற்சியில் வென்றதும் களத்தடுப்புக்கு அவர் முடிவுசெய்தார். இதற்கு முன்னர் அந்த மைதானத்தில் நடந்த ஆட்டங்களில் இரண்டாவதாகக களமிறங்கிய அணிகள் அதிக தடவைகள் வென்றன என்ற கணக்கு அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், பிசகு அங்கேதான் ஆரம்பமாயிற்று. தன் கணக்குப் பிழைக்கப் போகின்றது என்பது ஆட்டத்தின் நடுவிலேயே சனத்துக்குப் புரிந்திருக்கும்.

துடுப்பெடுத்தாடிய இந்தியா ஆரம்பம் முதல் ஓட்டங்களைக் குவித்தது. முரளி மற்றும் வாஸ் தவிர எந்தப் பந்து வீச்சாளரும் திறமை காட்டவில்லை. தில்கார, நிஸங்கவின் பந்துகள் துவம்சம் செய்யப்பட்டன. அவர்களின் ஓட்டச் சராசரி முறையே 6இற்கும் 8இற்கும் மேல். இது அடுத்த தவறு. இந்திய ஆரம்ப ஜோடியை 153 ஓட்டங்கள் வரை தகர்க்க முடியாமல் போனமை மற்றொரு தவறு. பின்னர் நிலைத்து நின்று ஆடாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தமை மிகப் பெரிய தவறு. ஆக, மொத்தத்தில் அனைத்தும் தவறு. அவற்றின்

(11ஆம் பக்கம் பார்க்க)













களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் கைதிகளை விடுவிக்கக் கோரி நேற்று யாழ். செயலகத்துக்கு முன்பாக கண்டி வீதியை வழிமறித்தவாறு மறியற்போராட்டம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மறியலில் ஈடுபட்டிருந்த காட்சி. (படங்கள் : தேவராஜன்)

# புலிகளுடன் சமாதானம் பேசும் வேளையில் அவர்களுக்கு உதவியோர் சிறையில் வாடுவதா?

## எந்தவகையிலும் நியாயமில்லை என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்பட்டு அவர்களுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்ற இவ்வேளையிலும் புலிகளுக்கு உதவி செய்தனர் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழ்க் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.செயலகம் முன்பாக இடம்பெற்ற அடையாள மறியற் போராட்டத்தின் முடிவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதிச் சிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக எமது ஒருமித்த ஒற்றுமையைக் காட்டவும் நாங்கள் அனைவரும் அவர்களின் பக்கம் இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்தவுமே இந்த அடையாள மறியற்போராட்டத்தை மேற்கொண்டோம்.

கைதிகள் பல தடவைகள் உண்ணாவிரதத்தில ஈடுபட்டபோது, ஒவ்வொரு தடவையும் அரசியல்வாதிகள் கொடுத்த வாக்குறுதிகளை நம்பி அவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இடையிடையே ஒரு சில் விடுதலையும் செய்யப்பட்டனர். ஆனால், கணிசமான அளவு கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதாயின் அதற்கு ஜனாதிபதி ஒப்பமிட வேண்டும். அது சாத்தியமான விடயமல்ல. எனவே, அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு எங்கள் அனைவரது ஆதரவும் உண்டு - என்றார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனதுரையில் தெரிவித்ததாவது:-

இந்த அரசு ஆட்சிக்கு வந்தால் தமது பிரச்சினைகள் தீரும் என்று எண்ணிய மக்களுக்கு அரசின் நிலைப்பாடு என்ன?

விடுதலைப் புலிகள் இங்கு நடமாட முடியும் என்றால் அவர்களுக்கு உணவு, நீர் வழங்கியவர்களைத் தடுத்து வைத்திருப்பதால் என்ன பிரயோசனம். இந்த விடயத்தில் தமிழரான சட்டமா அதிபரும் துரோகம் செய்கின்றார். பாதுகாப்பு அமைச்சர் அனுமதி வழங்கியும் அவர் அனுமதி வழங்க மறுப்பது ஏன்? சிலவேளைகளில் பிரதம நீதியரசர் பதவியை எதிர்பார்கிறாரோ தெரியவில்லை. உடனடியாக இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லையேல், இதற்காக நாடாளுமன்றுக்குள்ளும் போராடத் தயாராக உள்ளோம் - என்றார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனதுரையில்:-

இந்தக் கைதிகள் விடயம் தொடர்பாக நாங்கள் சட்டமா அதிபர் உட்படப் பலருடனும் பல தடவைகள் பேசியபோது வாக்குறுதிகள் வழங்கப்பட்டனவே தவிர, இதுவரையும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. கைதிகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும்போது அவர்களின் சாவுக்காகக் காத்திருப்பதா? உடனடியாகக் கைதிகள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்படவேண்டும் - என்றார். (ம-10-8-86)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

இரண்டாவது உலக இந்து மகா நாட்டை ஒட்டி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படவுள்ள பண்ணிசை, கட்டுரை, பேச்சு போட்டிகளுக்கான இறுதி விண்ணப்ப திகதி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக 'சிவமகாலிங்கம், உதவிப் பணிப்பாளர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, பிராந்திய அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான விதிமுறைகளை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும், கட்டுரைப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும், மற்றைய போட்டிகள் நடைபெறவுள்ள திகதியும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# புத்தளம் நகரில் மேலதிக பொலீஸார் குவிப்பு கலகமடக்கும் பொலீஸாரும் காவலில்!

புத்தளம்,மார்ச்11

நேற்றுமுன்தினம் புத்தளம் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து புத்தளம் நகரில் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிலாபம், ஆனமடு, வண்ணாத்திவில்லு போன்ற பொலீஸ் நிலையங்களிலிருந்து மேலதிக பொலீஸார் வரவழைக்கப்பட்டு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலீஸ் ரோந்து இடம்பெறுவதுடன் கலகம் அடக்கும் பொலீஸாரும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று புத்தளம் பகுதிக்கு விஜயம் செய்த வடமேல் மாகாண பிரதி பொலீஸ்மா அதிபர் அசோகா ரத்தின வீர சம்பவம் இடம்பெற்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

புத்தளம் நகரில் நடந்த அசம்பாவித சம்பவங்களை அடுத்து பதற்றம் ஏற்பட்டதால் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிமுதல் நேற்று அதிகாலை 6 மணிவரை பொலீஸார் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருந்தனர். நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு நகரில் வழமை போன்று அலுவல்கள் நடைபெற்றன.

புத்தளம் நகரில் உள்ள நூர் பள்ளிவாசல் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஜீப் வண்டியில் வந்துகொண்டிருந்த எச்.ரியாஸ் என்ற வாலிபர் மரணமானார். இதன் எதிரொலியாக இரு வீடுகளும் ஓர் ஓட்டோவும் ஒரு சைக்கிளும் தீவைத்துக்கொளுத்தப்பட்டன. ஒரு தேநீர்க் கடை அடித்து உடைக்கப்பட்டது.

புத்தளம் பகுதியில் இரு தரப்பினருக்கிடையே இருந்து வரும் பகைமை முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் எனவும் - தவறு செய்தவர்கள் பொலீஸாரால் விரைவில் கைதுசெய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் எனவும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதற்கிடையே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான எச்.ரியாஸின் ஜனாஸா பரிசோதனை நேற்று பிற்பகல் வரை இடம்பெறவில்லை. சிலாபம் நகரில் இருந்து விசேட வைத்திய அதிகாரி வந்த பின்னர் பரிசோதனை நடைபெறும் என மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.பரீத் தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் புத்தளம் வைத்தியசாலையிலும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நபர் ஒருவர் கொழும்பு வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

## மருத்துவமனையில் நகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 5ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று தமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

# புலிகளின் நீதிமன்ற வளாகம் இன்று கிளிநொச்சியில் திறப்பு

வவுனியா,மார்ச்11

தமிழீழ நீதிமன்ற வளாகம் இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தினால் திறந்துவைக்கப்படும்.

'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் போது முற்றாகச் சேதமாக்கப்பட்ட தமிழீழ நீதிமன்ற கட்டடம் தற்போது புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

இன்று காலை 10 மணிக்கு திறப்பு விழா நிகழ்ச்சிகள், தமிழீழ நீதித்துறை பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெறும். அரசியல் ஆலோசகர் மதியுரைஞர் நீதிமன்ற வளாக கட்டடத்தைத் திறந்துவைத்து சமாதான சூழ்நிலை பற்றி சிறப்புரையாற்றுவார்.

இந்த நிகழ்வில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட புலிகளின் மூத்த தளபதிகளும் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.

இந்த நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்று, குடியியல் நீதிமன்று, குற்றவியல் நீதிமன்று, மேன்முறையீட்டு நீதிமன்று, சட்டக் கல்லூரி என்பன இயங்கும். (ம)

# ஆனமடுவ வீதியில் மரங்களை வீழ்த்தி தடைகள்! ஆங்காங்கே ரயர்கள் எரிப்பு!!

ஆனமடுவ - கொழும்பு வீதியில் நேற்று மரங்கள் வெட்டிப் போடப்பட்டிருந்தன. வீதியில் பல இடங்களிலும் ஆங்காங்கே டயர்களும் எரிந்துகொண்டிருந்தன.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் பேரணிக்கு மக்கள் வருவதைத் தடைசெய்யவே இவை செய்யப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டது.

சம்பவம் பற்றி கேள்வியுற்ற ஆனமடுவ, சிலாபம் பொலீஸார் அந்த இடத்துக்குச் சென்று வீதித் தடைகளை அகற்றினர். அச்சம் காரணமாக பஸ்கள் நேற்று சேவையில் ஈடுபடவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். (ம)

# வடக்கு – கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றிணைந்ததன் பயன் தனித்தரப்பு

## அதிபர் மஜீத் பாராட்டு விழாவில் ஹரீஸ்

மருதமுனை,மார்ச்11

"வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்ததன் பயனாக இனி நடைபெறவிருக்கின்ற சமாதானப்பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்குழு அந்தஸ்து பிரதமரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆரோக்கியமான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவைப்பின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிச்சயம் ஆதரவு வழங்கவேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன். - இப்படி நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எச்.எம்.ஹரீஸ் கூறினார்.

17வருடங்கள் மருதமுனை அல்மனாரில் அதிபராக கடமையாற்றிய ஏ.எச்.எம்.மஜீத்திற்கு மருதமுனை மக்கள் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் மருதமுனை அல்மனாரில் நடத்திய சேவை நலன் பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஹரீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனைக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச் காதர் இப்றாகீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக மு.கா.தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டார்.

சிறப்பதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எச்.சேகு இஸ்ஸதீன், எம்.எம்.மயோன் முஸ்தபா மற்றும் எஸ்.இஸட்.மௌலானாவும் கலந்துகொண்டு உரையாற்றினார். (ம)

# இலங்கை வந்த ஈராக் உளவுச் சேவை அதிகாரிகள் மூவர் மாயமானார்கள்!

## கண்டுபிடிக்க நாடு முழுவதிலும் தேடுதல்

கொழும்பு,மார்ச்11

ஈராக்கிலிருந்து சிலதினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த ஈராக் உளவுச் சேவை அதிகாரிகள் மூவரைக் காணவில்லையென செய்தியொன்று தெரிவிக்கின்றது. அவர்களைக் கண்டுபிடிக்க குற்றவிசாரணை பொலீஸார் நாடு முழுவதும் தேடுதலை ஆரம்பித்திருக்கின்றனர்.

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொள்ளவிருக்கும் தாக்குதலுக்கு எதிராக உலக நாடுகள் பலவற்றில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்வதற்காக 600 உளவுச் சேவை அதிகாரிகளை ஈராக் அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த அதிகாரிகளில் மூவரே இலங்கை வந்திருக்கின்றனர்.

இலங்கையிலும் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்யவே இவர்கள் வந்துள்ளனர் என்ற தகவல் இலங்கை உளவுத் துறையினருக்கு கிடைத்திருந்ததால் அவர்களின் நடமாட்டம் குறித்து ஆரம்பம் முதலே அவதானிக்கப்பட்டு வந்தது. இருப்பினும், அவர்கள் மூவரும் திடீரென மறைந்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

இலங்கை உளவுத் துறையினர் எந்த ஒரு தகவலையும் பெற முடியாதவாறு ஈராக் அதிகாரிகள் மூவரும் தலைமறைவாகியுள்ளனர் என்று உள்துறை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிகிறது.

இம்மூவரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை என்று கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகளும் தெரிவித்திருக்கின்றனர். (ம)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 - 04 - 1949



மறைவு
22 - 03 - 2002

## அமரர் சுப்பு கந்தசாமி

என்றென்றும் எம் நினைவில் நீங்கா அன்ரப்பாவே!
பண்பாலும் பாசத்தாலும் எம்மை வழி நடத்தினீரே!
ஆயிரமாயிரம் ஆண்டுகள் சென்றாலும் - இந்த
அவனிதனிலே நினை மறவோம்.

உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பாஸ்கரதேவன் குடும்பம்,
நாகரத்தினம் குடும்பம்.

(15482)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
07 - 10 - 1958



உதிர்வு
20 - 02 - 2002

## பழனிமலை அருந்தவராசா

திதி: 11-03-2003

அருந்தவம் தந்த அருந்தவராசா - அன்னை
தந்தைக்கு பிஞ்சுவயதிலே தோள்கொடுத்தாய்
ஊறணி மண்ணதனில் குறும்புகளோடு நீ
ஊற்றுக்கட்டிலிலும் ஓடித்திரிந்ததை மறப்போமோ?
எண்சகோதரத்துடன் ஏழ்மையில் வளர்ந்து
ஏழு குழந்தையுடன் பேரப்பிள்ளையும் இரண்டு கண்டாய்
காலத்தின் கோலத்தால் உறவினர் கண்படாது
காலன்தான் அழைத்தானோ காற்றாய் மறைந்துவிட்டாய்
ஆண்டு பல ஆனாலும் அருந்தவா உன்
*ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

ஊறணி,
வல்வெட்டித்துறை.

(15471)

ப.ஆனந்தராசா
குடும்பத்தினர்.

## 'பொப்லெப்' செயலமர்வு பிற்போடப்பட்டது

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நூலக அபிவிருத்திப் பிரிவினால் வடமராட்சி கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட 'பொப்லெப்' செயல்திட்ட ஆசிரியர்களுக்கு இன்றும நாளையும் நடத்தப்படவிருந்த பயிற்சிச் செயலமர்வும், 'பொப்லெப்' நூல் பொதி விநியோகமும் பிற்போடப்பட்டுள்ளதாக மாகாண நூலக இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வலயத்தில் செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் கூறினார். (ஒ)

## இருவர் காயம்!

ஓமந்தை, புளியங்குளம் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள துவிச்சக்கர வண்டி விபத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற சேரன் வாணிப நிலைய ஊழியரான விசுவேசவேல் (வயது28), துவிச்சக்கர வண்டியை ஓட்டிச்சென்ற வெள்ளையம்மன், கொலலப் புளியங்குளத்தைச் சேர்ந்தவரான வி.மருதப்பு (வயது35) ஆகிய இருவருமே முகம், கை மற்றும கால் பகுதிகளில் படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்த இருவரும் மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-5)

## படகு சிப்பந்தி கடலில் மரணம்!

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய ஆயத்த வழிபாட்டிற்கு பக்தர்களை ஏற்றிக்கொண்டு சென்ற படகின சிப்பந்தி ஒருவர் நேற்றுமுன்தினம் கடலில் ஏற்பட்ட விபத்தொன்றில் மரணமானார்.

நெடுந்தீவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாரான நாதன் என்பவரே மரணமடைந்தவராவார்.

படகை கரையில் அணைக்கும் போது தவறி கடலில் வீழ்ந்த போதே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கச்சதீவில் படகு அணைப்பதற்கான துறைமுக வசதியேதும் இல்லை. இச் சம்பவத்தால் திருப்பலிப்பூசை நிகழ்வுகள் எளிமையான முறையில் ஒப்புக் கொடுக்கப்பட்டன. (ஐ-111)

# ஐந்தாம் வருட நினைவாஞ்சலி



திருமதி
ஜோய் றொமின் அன்ரனிற்ரா

பூவுலகில்
11.06.1973


விண்ணுலகில்
11.03.1998

*அன்புச்செல்வமே றொமின் குஞ்சு*
*உன்னைப் பிரிந்து ஐந்து*
*ஆண்டுகள் ஆகிவிட்டதம்மா!*
*உன்னை இறைவன் தனக்கென்று*
*தேர்ந்தெடுத்து விட்டார்*
*அவரின் மலர்ப் பாதங்களில் நீ என்றும்*
*மலராக வீற்றிருப்பாய்!*

- குடும்பத்தினர்.

*36/1, புனித ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர்.*

(15480)


முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

WATER TEC
முத்திரையை அவதானியுங்கள்

510, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. 337288 (நேரடி). 324281-5, 337283-5
:பெக்ஸ். 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 96/1. ஸ்ராஸ்லி வீதி, யாழ்ப்பாணம்.

விலை 14/=

சுடர் ஒளி

16.03.2003 இதழில்




- சமாதானத்தில் புலிகள் கவனம் உதவி பெறுவதில் அரசு தீவிரம்
- எல்லைதாண்டும் மீனவர்களால் தொல்லை
- கூடாரத்துக்குள் தலை வைத்த ஒட்டகம்போல் குழப்பத்தை உண்டுபண்ணும் தரப்பினர்கள் - தேரடி
- குற்றங்களைத் தடுக்குமா தூக்குத் தண்டனை?
- இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தம் ஆனால், புலனாய்வுப் பணிகள் தீவிரம் - வடபுலம்
- வாஜ்பாயை நெருங்கும் ஜெயலலிதா வைகோவுடன் உறவாடும் கருணாநிதி
- வெளிநாட்டு மோகம் - நகைச்சுவை விருந்து

மற்றும் மதன் சித்திரத் தொடர்கதை, மசாலாமிக்ஸ், சினிமா, சிறுவர்பகுதி, கலையமுதம், விளையாட்டு, பெண், இணையத்தளங்களிலிருந்து உட்பட பல்வேறு ஆக்கங்கள்.

(C-26875)

உதயன்

# நன்றே செய்க! அதை இன்றே செய்க!!

களுத்துறைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் ஐம்பத்தியாறு தமிழ்க் கைதிகளின் போராட்டம் பதினோராவது நாளாகத் தொடர்கின்றது.

உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் நாகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மயக்க நிலையை அடைந்துள்ள மூன்று கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலை மருத்துவப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றொருவர் இருதயத் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்.

தென்னிலங்கைச் சிறையில் விசாரணையின்றி வாடும் தமிழ்க் கைதிகள் பல கட்டங்களாகப் போராட்டம் நடத்தி வந்திருக்கின்றார்கள்.

அதேசமயம், காவலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளில் கணிசமானோர் விடுவிக்கப்பட்டுமிருக்கின்றார்கள்.

என்றாலும், பெரும் எண்ணிக்கையானோர் விடுவிக்கப்பட்டதைக் காரணங்காட்டி, விடுவிக்கப்படாத எஞ்சியோரின் தடுப்புக் காவலை நியாயப்படுத்திவிட முடியாது.

யுத்தம் புரிந்தவர்கள் இப்போது யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். ஒருவருடன் மற்றவர் ஒரே மேசையில் இருந்து சமரசம் பேசுகின்றார்கள்; ஒருவருக்கு ஒருவர் உதவுகின்றார்கள்.

இப்படி யுத்தம் புரிந்தவர்களும், யுத்தத்தை வழிநடத்தியவர்களும் கூடி மகிழ்ந்திருக்க, அவர்களுக்கு முன்னர் உதவினார்கள், அவர்கள் பற்றிய தகவல் தெரிந்திருந்தும் அதனை பாதுகாப்புத் துறையினருக்கு அறிவிக்கத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டோரை மட்டும் சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்?

அது ஒரு புறம். மறுபுறத்தில் களம் இறங்கிப் போர் புரிந்தவர்கள் இன்று சுதந்திர புருஷர்களாக இருக்க, அந்தப் போருக்கு வலுவூட்ட வெளியிலே காரியமாற்றியவர்கள் கொடுஞ்சிறையில் வாடுகிறார்கள். என்ன விநோதம் இது!

வேறு வழியில்லாமல் அவர்கள் சாகும்வரை போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

தென்பகுதி சிறையில் தமிழ்க் கைதிகள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்.செயலகம் முன்னால் ஒரு மணி நேரம் அடையாள மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கைதிகளுக்காகத் தமிழர் பிரதேசங்கள் எங்கும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டுவிட்டன; பல அரசியல் தலைவர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகளின் பல சுற்றுகளில் இது குறித்து விரிவாகப் பேசப்பட்டும் உள்ளது. தமிழ்க் கைதிகள் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையிலான முடிவு விரைந்து எடுக்கப்பட வேண்டும் என்று புலிகளின் பிரதிநிதிகள் அடித்துக் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் சிறைகளில் வாடும் தமிழ்ச் சகோதரர்கள் குறித்து அதிக சிரத்தையும் கவலையும் கொண்டுள்ளார். இந்தக் கைதிகளின் போராட்டத்துக்கு நியாயமான தீர்வுகாணும் வகையில் உருப்படியான நடவடிக்கை எதனையும் அரசு எடுக்கவில்லை என்று கடந்தவாரம் தன்னைக் கிளிநொச்சியில் சந்தித்த கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தலைவர் பிரபாகரன் வேதனையோடு சுட்டிக்காட்டியிருந்தார்.

இக்கைதிகளின் நிலை குறித்து ஜனாதிபதி குமாரதுங்கவுடன் தாம் நேரில் பேசியிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் குறிப்பிட்டிருக்கின்றார். இந்தக் கைதிகளின் நிலையைக் கவனத்தில் கொண்டு பொதுமன்னிப்பின் அடிப்படையில் அவர்களை விடுவிப்பதற்கான வாய்ப்புக் குறித்து சட்டமா அதிபருடன் பரிசீலிக்கத் தாம் தயார் என்று ஜனாதிபதி கூறியதாகவும் சதாசிவம் எம்.பி. தெரிவித்திருக்கின்றார். அவர் வெளியிட்ட தகவல் உண்மையானால் அது வரவேற்கத்தக்கதே.

'நன்றே செய்க. அதை இன்றே செய்க' - என்று கூறுவர். எனவே, தமிழ்க் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி நல்லது செய்ய விரும்பினால் அதை உடனே செய்ய வேண்டும். சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் - ஓர்மம் மிக்க - கைதிகள் விடயத்தில் காலம் தாழ்த்தினால் அவர்களுக்கு நல்லது செய்யும் வாய்ப்பு ஜனாதிபதிக்கு கிட்டாமல் போய்விடும்.

# சீருடை கிடைக்காத மாணவர் விவரங்கள் திரட்டப்படுகின்றன

வலி.தெற்கு,மார்ச்11

புதிய நடைமுறைத் திட்டத்தின் கீழ் இவ்வருடத்திற்கான இலவசபாடசாலைச் சீருடைகளைப் பெற்றிராத மாணவர்களுக்கு அவற்றை வழங்க கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாடசாலைகள் மூலம் வழங்கப்பட்டு வந்த இச்சீருடைகள் இவ்வருடம் தொடக்கம் பிரதேச செயலகங்கள் ஊடாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இப்புதிய நடைமுறைகளின் கீழ் சீருடைகளைப் பெற்றுக் கொள்ள பல மாணவர்கள் தவறிவிட்டனர்.

சீருடைகள் பெறுவதற்கான ஒழுங்கு விதிமுறைகள் பற்றி பெற்றோருக்கு பூரண விளக்கமின்மை, விண்ணப்பப்படிவங்கள் முழுமையாக நிரப்பப்படாமை, உரிய நேரத்தில் உரிய இடங்களில விண்ணப்பப்படிவங்கள் கையளிக்கப்படாமை போன்ற பல காரணங்களால் பல மாணவர்களுக்கு சீருடைகள் கிடைக்கவில்லை.

ஆகவே, சீருடைகளை வழங்குவதற்கு, இதுவரை சீருடைகளைப் பெறாத மாணவர் பற்றிய விவரங்கள் கல்வித்திணைக்களத்தால் தற்போது திரட்டப்பட்டுவருகிறது. (ஓ-152)

## திருவீதி மான்மியம்

### இவர்கள் கதி என்ன?

தொண்டராய் கல்வி ஊட்டி
தூய நற் சேவை செய்தார்
ஆண்டுகள் பலவாய் அன்னார்
ஆற்றிய சேவை பொய்யோ?
எண்ணிடில் இவர்போல் இங்கு
எவர் செய்தார் தியாகம் மண்ணில்
உண்மையில் இவர் தியாகம் கண்டு
உவந்தனன் தமிழ்த் தாயன்றோ?
கண் கெட்டார் போலிவரையிங்கு
காணாது இருப்போரெல்லாம்
புண்பட்ட இவர் உளத்தை
பூரிக்க செய்ய வாரீர்~

- விகடகவி.

# உரிமைகள் பற்றிப் பேசும் பெண்கள் முதலில் அடுத்தவரை மதிக்க வேண்டும்

## மகளிர்தின விழாவில் மருத்துவ பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

பெண் உரிமை தொடர்பாகப் பேசும் பெண்கள் முதலில் சமூகத்திலும், ஏனைய இடங்களிலும் பெண் உறவுகளை மதித்து நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே பெண் உரிமை பற்றி குரல் கொடுக்க முடியும்.

- இவ்வாறு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சனியன்று நடைபெற்ற மகளிர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வீடுகளிலும், சமூக நிகழ்வுகளிலும் பெண்களாகிய நாமே பெண்களை மதிப்பதில்லை. அத்துடன், அவர்களுக்குச் சரியான அந்தஸ்தையும் வழங்குவதில்லை. சில பெற்றோர் தமது பிள்ளைகளை பெண், ஆண் என வேறுபடுத்திக் கூறும் - பாரபட்சம் காட்டும் தன்மையில் இருந்து இதுவரை விடுபடவில்லை. ஆணுக்கு அடுத்தபடியாகத்தான் பெண்பிள்ளைகளைப் பெற்றோர் நோக்குகின்றனர். பெண்களாகிய நாமே எமது உரிமைகளையும் இறைமைகளையும் வேறு ஒருவருக்கு தாரை வார்த்து விடுகிறோம். இந்நிலை மாறவேண்டும்.

ஒரு குடும்பத்தில் பெண் பிள்ளையும் ஆண் பிள்ளையும் சமமான அந்தஸ்தில் வளர்க்கப்பட வேண்டும்.

சில பெற்றோர் ஆண்பிள்ளைகளை உயர்படிப்புகளைத் தொடர அனுமதித்துவிட்டு பெண்பிள்ளைகளை வீட்டு வேலையைக் கவனிக்கும் பொருட்டு வீடுகளில் அமர்த்தி விடுகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அதற்காக முதலில் பெண்களாகிய நாம் எமது உறவுகளை மதிக்க வேண்டும். இதன் மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும் - என்றார்.

மேற்படி மகளிர்தின நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த 200இற்கும் மேற்பட்ட பெண்களும் கலந்து கொண்டனர்.

ஜப்பான் நாட்டின் சகலவித அடக்குமுறைகளுக்கும் எதிரான சர்வதேச இயக்கத்தின் தலைவி நிமால்கா பெர்னாண்டோ உட்பட பல பெண் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பட.சந்திரசேகரவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

தொடர்ந்து நாடகம், நடனம் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெற்றன. (எ-8)

# கிராமப்புறப் பாடசாலைகளுக்கு வசதிகளைப் பெறுவதற்கு பெற்றோர் பங்கு பிரதானம்!

## அமைச்சர் மகேஸ்வரன் கூறுகிறார்

அச்சுவேலி,மார்ச்11

மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பு - வசதி நிலைகளில் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும், கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் களையப்பட்டு கிராமப்புறப் பாடசாலைகளின் வள வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். குறிப்பாக இதற்கான முயற்சிகளில் பெற்றோர்கள் ஆர்வத்துடன் உழைக்க வேண்டும்.

- இவ்வாறு கூறினார் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரி அதிபர் திருமதி ச.கனகராசா தலைமையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் கல்வித்தரத்தையும் வசதிகளையும் மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு மிகமுக்கியமாகும்.

சமகால யுத்தச்சூழ்நிலை தமிழ் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மாணவர்கள் தமது சூழலில் வசதி வாய்ப்புக்களுடன் கற்பதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் பெற்றோர் ஆர்வத்துடன் உழைக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஆளும்கட்சியுடன் இணைந்திருந்த தமிழ் அரசியல் வாதிகள் தமது நிதி ஒதுக்கீடுகளை தமது வளர்ச்சிக்கும் தங்களது ஏவலாளர்களின் வளர்ச்சிக்கும் மட்டுமே பயன்படுத்தினர். அந்த அரசியல் பாதையை மாற்றி நான் தமிழ்ப் பிரதேசம் முழுவதற்கும் பயன் படத்தக்க முறையில் பங்கீடு செய்கின்றேன்.

அச்சுவேலியில் பொருத்தமான விளையாட்டு மைதானம் இல்லாதிருப்பது மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றது. இதனைப் போக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன் - என்றார் அவர். (எ-11)

### நாளை

மாசி 28
புதன்கிழமை
(12.03.2003)
திதி : நவமி
முன் இரவு 10.48 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முழுவதும்
சுபநேரம் : 4.53 - 6.23
ராகுகாலம்: 12.23 - 1.53
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வாழ்க்கையில் கோடை மழையைப்போல் வருகிறது துன்பம். பன்னீரைப் போலக் கிடைகிறது இன்பம்.

# இலவசப் புத்தகங்களை அச்சிடும் பணியில் தாமதம்

கொழும்பு,மார்ச்11

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்களில் பெருமளவு தமிழ்மொழி மூலப் பாடப் புத்தகங்கள் இன்னும் அச்சிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

சுமார் 30லட்சம் பாடப் புத்தகங்கள் இதுவரை அச்சிடப்படவில்லை எனவும் -

அவற்றில் பெரும்பாலும் தமிழ்மொழி மூலப் பாடப் புத்தகங்களே அச்சிடப்படாமல் உள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

பாடப் புத்தகங்களை அச்சிடும் பணிக்கான அச்சகங்களைத தெரிவுசெய்யும் முன்னர் ஓர் அச்சகத்தினால் எத்தனை பாடப் புத்தகங்களை எவ்வளவு காலத்தில் அச்சிட முடியும் என்ற தகவலை சரியாகப் பெற்றுக்கொள்ளாமலேயே இப்பணிக்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் புத்தகங்களை அச்சிட்டு வழங்காத அச்சகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஓ)

# ரூபா 25ஆயிரம் கொடுப்பனவுக்கான காசோலையை மாற்றும்போது கிராமிய வங்கியில் பிடித்தம் ஏன்?

## தென்மராட்சி பயனாளிகள் கேள்வி

யாழ்ப்பாணம்,மார்ச்11

மீளக்குடியமர்ந்தோருக்கான 25ஆயிரம் ரூபா கொடுப்பனவுக் காசோலையை கிராமிய வங்கியில் பணமாக மாற்றும்போது நூறு ரூபா கழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக சிலபொருள்களை பெற்றுக்கொள்ளும்படி பயனாளிகள் வற்புறுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த பயனாளிகளில் ஒரு பகுதியினரே இது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு 25ஆயிரம் ரூபா கொடுப்பனவு காசோலையாக வழங்கப்பட்டது.

அக்காசோலைகளை அவர்கள் குறிப்பிட்ட ஒரு கிராமிய வங்கியில் பணமாக மாற்றச் சமர்ப்பித்ததாகவும்- காசோலைக்குரிய பணத்தில் 100ரூபா பிடித்தம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக மீன்ரின், முகப்பவுடர், பேரிச்சம் பழம் போன்றவையும் மிகுதிப் பணமும் வழங்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

மீன்ரின், முகப்பவுடர் போன்றவை விலைக்கேற்ற தரத்தில் இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதேவேளை, இந்தப் பொருள்களுக்கான பற்றுச்சீட்டு எதுவும் சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் 15ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை மாற்றும்போதும் இதே நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்த நடைமுறை குறித்து முறையான விளக்கம் வழங்கப்படாததால் பொதுமக்கள் தரப்பில் பல சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. (ஓ-10)

### வண்ணையில் வந்தமர்ந்த வைத்தீசா

வணங்கியே துதித்தோம் வரமருளீசா
வளமான வாழ்வுக்கு வழிசமைத்தருளீசா
வண்ணையில் வந்தமர்ந்த வைத்தீசா
வரமது தந்தே நல்வாழ்வருளீசா
வள்ளல் முருகனுடன் வலம் வருமீசா
வலம் வந்து வணங்கினோம் நலமருளீசா
வந்தனை செய்தோம் வந்தே அருளீசா
வாலாம்பிகை நாயகரே வைத்தீசா!

- செல்வி பா.கலைவாணி.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பன்னிரண்டாம் திருவிழா இன்று)

சமாதான சூழலில் இது தேவையா?

# பொலீஸ் பதிவு செய்யும் நடைமுறை தமிழரை இம்சைக்குள்ளாக்கும்!

## கைவிடக்கோருகிறார் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம்,மார்ச்11

தெற்கே வரும் தமிழர்கள் பொலீஸில் பதிவுசெய்ய வேண்டும் என்ற புதிய நடைமுறையானது படையினரின் இம்சைகளுக்கு தமிழர்கள் மீண்டும் முகங்கொடுக்கும் நிலையை உருவாக்கும். சமாதான சூழலில் இந்த நிலை உருவாக இடமளிக்க வேண்டாம்.

- இப்படிப் பிரதமரைக் கோரியுள்ளார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றிலேயே இப்படி அவர் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலீஸ் பதிவு விடயம் தமிழ் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் என்பதோடு, அவர்களுக்குப் பெரும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும். தமிழனத்தைத் பாகுபடுத்தி புறந்தள்ளும் இந்த நடவடிக்கையினால் ஏற்படப்போகும் பெரும் எதிர்மறையான பின் விளைவுகளை தவிர்த்துக் கொள்வதற்காக இந்த விடயத்தில் உடனடியாக சம்பந்தப்பட்டு விசாரணைசெய்து இதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகுந்த மனவேதனையுடன் கேட்டுக்கொள்ளவேண்டிய நிலைப்பாட்டிற்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்.

நாட்டு மக்களால், குறிப்பாகத் தமிழ் மக்களால் முன்னர் அனுபவிக்கப்பட்டுவந்த இவை போன்ற புறக்கணிப்புக்களும், கசப்புணர்வுகளும், பரிதவிப்பு மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கைகளின் பின்னர் சற்று தணிந்து, மக்கள் வடக்கிலிருந்து தெற்கிற்கும், தெற்கிலிருந்து வடக்கிற்கும் சுதந்திரமாகவும், சமாதானமாகவும், அச்சமின்றியும் போக்குவரத்துச் செய்யக் கூடியதாக இருக்கிறது.

தமிழ் சமூகத்தினரைப் புறக்கணித்து, அவர்களை அடிமைகளாக்கி அதனால் பாதுகாப்புப் படையினரின் பலவிதப்பட்ட இம்சைகளுக்கு மீளவும் அவர்களைத் தள்ளிவிடக் கூடியதும் எதுவித பிரயோசனமுமில்லாததுமான திட்டமிடப்பட்ட இந்த நடவடிக்கை தமிழர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்துவதோடு அவர்களின் பெரும் எதிர்ப்பினையும் சம்பாதிக்கும்.

மேலும், இந்த நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைக்கும் அந்த நடவடிக்கையின் பயனாகத் தற்போது நாட்டில் நிலவும் சமாதானச் சூழ்நிலைக்கும் பாரியளவிலான எதிர்மறையான தாக்கத்தைக் கட்டாயமாக ஏற்படுத்தும்.

ஏனைய சமூகங்களிலிருந்து தமிழ சமூகத்தினரைப் புறக்கணித்துப் புறந்தள்ளி, அதனால் அவர்களினது மனித உரிமைகளை முற்றுமுழுதாக மீறுவதற்கும் அவர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை மறுப்பதற்கும் அடிகோலுவதான நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைதான் இது என்பது தெட்டத்தெளிவாகின்றது.

எனவே இந்த விடயத்தில் தாங்கள் ஈடுபட்டு விசாரணை செய்து, உடனடியாக அதனை நிறுத்துவதற்கான நடவடிக்கையினை உறுதியுடன் மேற்கொள்ளுமாறு தங்களை மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன் - என்றுள்ளது. (எ-3)

## களுத்துறை உண்ணாவிரதிகள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை


கொழும்பு,மார்ச்11

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதம் இருந்துவரும் கைதிகள் தொடர்பான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு தயாரிக்கவிருக்கின்றது.

இந்த அறிக்கையை தயாரிப்பது தொடர்பாக ஆராய கடந்த வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தது.

இக்கைதிகள் தொடர்பாக முழுமையான அறிக்கையை தயாரிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக தெரிவித்திருக்கிறார்.

சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் பி.அந்தோனிமுத்து கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இக்குழு களுத்துறைக்குச் சென்று வந்தது. இதேவேளை, இக்கைதிகள் தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கவனத்துக்கும் அவர் கொண்டுவந்திருக்கின்றார். (ஐ)


**Canadian College of Business & Computers**

130 Bloor St.West , Suite 901 Toronto, Ontario, Canada, M5S 1N5 Phone 1-416413-1234 Fax: 1-416-413-0314 e-mail: roselyn@ccbc.ca

An opportunity to be a part the world's next trillion-dollar industry!

Fiber Optics Engineering at CCBC is suppored by Ontario Photonics Education and Association (OPETA), a think tank comprising of the best academic minds of Canda's Universities and internationally reowned industry leaders like JDS Uniphase.

All in Toronto! A Trendy, upscale and a very cool place to learn. Supported by intensive English language programs, guidance counsellors speciallized in on-the-job training with 10-start dates throughout the year.

**Scholarship Application Requirements**

1. Passport Copy
2. Birth Certificate
3. Educational Certificates / Transcripts
4. Employment Letter, if any
5. Fee of US $10 by Demand Draft in favour of "Canadian College of Business & Computers"
6. Proof of sufficient funds for tuition payment and living expenses; (estimated tuition fees: US $1,500 to US $8,000 depending on scholarship awarded; living expenses for two years - US $10,000)

Aptitute Test and Interviwe:
March 22 and 23
Location: BMICH, Colombo 07

**Scholarship Application Submission Deadline:**

March 21, 2003
Ms. Anushya
Ceylinco Consultancy & Allied Services
315, R.A. De Mel Mawatha, Colombo 03
Tel: 074-710240

WWW.CCBC.CA


## கருத்தரங்கும் செயலமர்வும்

மண்டைதீவு,மார்ச்11

மெல்லக்கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த விஷேட திட்டத்தை மாகாண கல்வித் திணைக்களம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முன்னோடித் திட்டத்தில் தரம்11 வகுப்புக்களில் கணிதபாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பொருத்தமான நவீன கற்பித்தல் உத்திகளை கையாளுதல் தொடர்பான கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் சகல கல்வி வலயங்களிலும நடத்தப்பட உள்ளன. (எ-88)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 20 - 01 - 1927



இறப்பு 09 - 02 - 2003

**அமரர் சின்னம்மா சின்னத்தம்பி**

எம் வாழ்வுயர தன் வாழ்வை உரமாக்கி நின்ற
எம் தாயின் ஆத்மசாந்திக்காக இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை தொட்டிலடி, சங்கானையிலுள்ள எம் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

*(இடம்பெயர்வு காரணமாக நேரில் வந்து அழைப்பிதழ் வழங்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.)*

தொட்டிலடி, சங்கானை. (15477) பிள்ளைகள், மருமக்கள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 28 - 12 - 1951



உதிர்வு 09 - 02 - 2003

**அமரர் இராமநாதர் குலவீரசிங்கம்**

சொல்லிப் புரியவைக்கும்
வேதனையா உங்கள் பிரிவு.
*ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 13.03.2003 வியாழக்கிழமை பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (15476) மனைவி, பிள்ளைகள்.

### நீங்காத நினைவுகளில் ஓராண்டு

தவப்பேறு 08 - 01 - 1930



சிவப்பேறு 11 - 03 - 2002

**அமரர் நாகலிங்கம் கனகசூரியர்**

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்;
நில அளவைத் திணைக்களம், கொழும்பு)

ஓராண்டு கழிந்துவிட்டாலும் எங்களை
அன்பாகவும், பண்பாகவும், பாசமாகவும் அரவணைத்து
சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த அருமைத் தந்தையே!
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை.

*எமது அன்புத் தெய்வத்தின்*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

(15489)

*'ஸ்கந்த வாசா'*
*சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.* மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 3,000 ஆசிரியர்கள் நியமனம் இழுத்தடிப்புக்கு யார் காரணம்?

## தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று களத்தில்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் சிபாரிசுடன் 3 ஆயிரம் ஆசிரியர் நியமனம் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக இன்று கல்வி உலகில் பலத்த விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த 3 ஆயிரம் ஆசிரியர் நியமனத்தின் பின்புலம் என்ன? என்ன நடக்கிறது?

வடக்கு - கிழக்கு மாகாணத்தில நிலவிய 20 வருடகாலப் போர் காரணமாக கல்வி சீர்குலைய ஆரம்பித்தது. அதன் ஓர் அங்கமாக ஆசிரியர் தட்டுப்பாடு நிலவியது. 2000ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வடக்கு - கிழக்கில் 6ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. இதனைக் கருத்திற்கொண்டே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 1999 இன் கடைக் கூற்றில் கல்வியமைச்சருடன் பேசியது. அங்கு தமிழாசிரியர் தட்டுப்பாடு விலாவாரியாகக் கூறப்பட்டது.

அதன் பலனாக 2000 ஜனவரி 9ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் கல்வியமைச்சர், உலகவங்கிப் பிரதிநிதிகள் ஆகியோருடன் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அங்கு 6 ஆயிரத்து 500ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்க முதற்கட்டமாக 3ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பது என்று தீர்மானமாகியது. அது உலக வங்கியாலும் இணக்கம் காணப்பட்டு அதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

இந்த 3ஆயிரம் ஆசிரியர்கள மூன்று வகையாக தெரிவுசெய்யப்படுவர். ஆயிரம் பேர் பட்டதாரிகளிலிருந்தும் ஆயிரம் பேர் ஜ.சி.ஈ. உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களிடமிருந்தும் ஆயிரம் பேர் தொண்டராக சேவையாற்றுபவர்களிடமிருந்தும் தெரிவு செய்யப்படுவர் என அங்கு தீர்மானமாகியது.

அதன்படி கல்விச் சேவை ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் 2001 இல் இந்நியமனங்களை செய்திருக்க முடியும். ஆனால், வேண்டுமென்றே தேவையில்லாத சாக்குப்போக்குகளைக் கூறி இழுத்தடிக்கப்பட்டது.

2002 மே 03ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. 01.01.2003இல் சகல நியமனங்களும் பூர்த்தி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

ஆனால், மூன்று வருடங்கள் இது இழுத்தடிக்கப்பட்டு வந்திருக்கிறது. என்ற உண்மை வெளியுலகிற்கு தற்போது தெரியவந்தும் தனித்தனியாக இந்த ஆசிரியர் நியமனங்களை நோக்குவது முக்கியம்.

### பட்டதாரி ஆசிரியர்

ஆயிரம் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை முதலில் நோக்கலாம். இது வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சை சார்ந்தது. வடக்கு - கிழக்கு முழுவதும் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாவட்ட ரீதியான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

**வி.ரி.சகாதேவராஜா**
பிரசார செயலர்
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

இதன் பலனாக 2002 ஜனவரியில் 721 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இது மாவட்டத்தில் நிலவும் வெற்றிடம். பாடரீதியான சேவை மூப்பு போன்ற பலவிடயங்களைக் கருத்திற்கொண்டு மாகாண கல்வியமைச்சு இந்நியமனங்களை வழங்கியது. இதில் வர்த்தகப் பட்டதாரிகள் பாதிக்கப்பட்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டும் உண்டு.

இந்த 3ஆயிரம் பட்டதாரி உள்ளிட்ட சகல ஆசிரியர்களும் சேவை பயிற்சி வழங்க 75 லட்ச ரூபாவும் வழங்கப்பட்டிருந்தது. முதலில் நியமிக்கப்பட்ட 721 பட்டதாரி ஆசிரியர்களில் ஆக 501 பேர் மாத்திரமே கடமையேற்றனர். அவர்களுக்கு சேவை முன்பயிற்சி வழங்க 33 லட்சத்து 43 ஆயிரம் ரூபா பயன்படுத்தப்பட்டது.

மேலுமொரு தொகுதி 170 பட்டதாரிகள் 2002 நடுப்பகுதியில் நியமிக்கப்பட்டனர். இருப்பினும் சுமார் 270 பேர் மேலும் நியமிக்கப்பட வாய்ப்புண்டு. இவர்களை நியமிக்க மாகாண சபை முயலவேண்டும்.

### உயர்தர ஆசிரியர் நியமனம்

ஜ.சி.ஈ (உ/த) சித்தி பெற்றவர்களிடமிருந்து பரீட்சை மூலம் ஆயிரம் பேரை நியமிக்க வேண்டும். இதற்கு விண்ணப்பம் கோரப்படவில்லை. இதற்கு டிப்ளோமாதாரிகள் ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு வர்த்தமானி அறிவித்தலைத் தயாரித்து கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கியபோதும் இன்னும் அது தாமதமடைகிறது. இனரீதியான பாரபட்சமே இது.

ஏற்கனவே, அதிபர், ஆசிரியர் பதவியுயர்வில் பலத்த இனரீதியாக பாரபட்சங்களைச் செய்த கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயல் இது என்று தமிழர் ஆசிரியர்சங்கம் கூறுகிறது.

### தொண்டர் ஆசிரியர் நியமனம்

மேற்படி இரு பகுதி ஆசிரியர் நியமனங்களுக்கும் அங்கீகாரம், நிதி வழங்கிய திறைசேரி, தொண்டராசிரியர் நியமனத்திற்கு நிதிவழங்க மறுத்துவிட்டது. அதனால், திருகோணமலையில் தொண்டர் ஆசிரியர் போராட்டம் தொடர்கிறது.

தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று 11ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதற்கும் இவ் விவகாரமே அடிப்படையானது. உடனடியாக மேற்படி நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் இந்நியமனங்களை இழுத்தடித்து பிரச்சனையை பூதாகரமாக்காமல் பாதுகாத்துக் கொள்வது அரசியல் வாதிகளின் கடமையாகும். ☆

# மக்கள் நம்பிக்கையை பெறத்தவறியதால் பல நிறுவனங்கள் நிலைத்து நிற்கவில்லை!

## நுண்கலைப்பீடத் தலைவர் உரை

வலி.வடக்கு,மார்ச்11

பல்வேறு சமய சமூக நிறுவனங்கள் இம்மண்ணில் சேவை செய்யவென தோன்றின. ஆயினும் அவை நிலைத்து நிற்கமுடியாமல் போய்விட்டன. அத்தகைய நிறுவனங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பத்தவறி விட்டதே அதற்குக் காரணமாகும்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் சபாஜெயராசா குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 21ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் ஸ்ரீ துர்க்கா தேவி அன்னபூரணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி சபாஜெயராசா மேலும் தெரிவித்ததாவது:-

"மேலைத்தேசத்தவர்களைப் பொறுத்தவரையில் பெண்ணியம் பற்றி கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாகவே சிந்தித்து வருகின்றார்கள். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பல வருடங்களுக்கு முன்னரே பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வந்துள்ளார்கள்.

பெண்ணியத்துக்கு தொன்றுதொட்டு மதிப்பளித்து கௌரவித்து வருபவர்களாக என்றும் தமிழர்கள் காணப்படுகின்றார்கள். இதன் அடிப்படையிலேயே பல பொது அமைப்புக்கள், நிறுவனங்களின் தலைவர்களாக இன்றும் பெண்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு நோக்கங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் நிறுவனங்கள் எழுகின்ற போதிலும் எழுந்த வேகத்திலேயே அவை காணாமற்போயுள்ளன. ஆனால், மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்ற நிறுவனங்களுக்கு என்றும் அழிவில்லை. அந்த வகையிலேயே இன்று துர்க்காபுரம் மகளிர் இல்லம் மக்களின் நம்பிக்கை, நன்மதிப்புடன் கட்டியெழுப்பப்பட்டு தனக்கென்று ஓர் இடத்தைக் கொண்டு பல்வேறு சேவைகளையும் முன்னெடுத்துச் செல்கின்றது.

மேலும் இத்தகைய சிறந்த சேவைகளை இந்நிறுவனம் முன்னெடுக்க வேண்டும் என்றார் அவர்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கலும் இடம்பெற்றன.

(ஒ-86)

# மாவட்ட விவசாய சமாசம் தோற்றுவிக்க நடவடிக்கை!

## பொருண்மியப் பொறுப்பாளர் தகவல்

வலி.தெற்கு,மார்ச்11

யாழ்ப்பாண மாவட்டத்தில் "மாவட்ட விவசாய சங்கங்களின் சமாசம்" உருவாக்கப்பட உள்ளது. அதற்கு வசதியாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சகல விவசாய சம்மேளனங்களையும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக பதிவுசெய்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழீழ பொருண்மிய பொறுப்பாளர் ஞானவேல் கேட்டுள்ளார்.

குடாநாட்டில் பல விவசாய சமமேளனங்கள் இயங்கிவரும் போதிலும் பல சம்மேளனங்கள் தமது பதிவுகளை மேற்கொண்டிருக்கவில்லை. உடுவில் கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் 28 விவசாய சம்மேளனங்கள் இயங்கிவந்த போதிலும் 19 சம்மேளனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

விவசாயத்துடன் தொடர்புடைய சகல அபிவிருத்தி வேலைகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்காலத்தில் விவசாய சம்மேளனங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்பட இருக்கின்றன. எனவே, இதுவரை பதிவு செய்யப்படாத விவசாய சம்மேளனங்கள் உடனடியாக பதிவை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாய சம்மேளனங்களின் அடிப்படைத் தகவல்கள் எம்மால் தற்போது சேகரிக்கப்பட்டுவருகின்றன.

இம்மாதம் 31ஆம் திகதிக்குள் சகல விவசாய சம்மேளனங்களும் பதிவுசெய்து, புனரமைப்புச்செய்து முழுமை பெற்ற சங்கங்களாகியவுடன் "மாவட்ட விவசாய சங்கங்களின் சமாசம்" தோற்றுவிக்கவும் முயற்சி எடுத்து வருகிறோம்.

- இவ்வாறு ஞானவேல் தெரிவித்துள்ளார்.

(ஒ-152)

## மருத்துவ முகாம்

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சி வடக்கு வரணிப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் எதிர்வரும 23ஆம் திகதி வரணி மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரிசோதனை முகாமில் கண், இரத்த அமுக்கம், சலரோகம், தொழுநோய், வயிற்று நோய், பொது மருத்துவம் ஆகியன தொடர்பாக லயன்ஸ் கழக வைத்தியர்கள், யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர் பரிசோதனை மேற்கொள்வர்.

(எ-117)

# வாசகர் திருமுகம்

## மதமாற்ற தடைச்சட்டம் தேவைதானா?

இனவாத அடிப்படையில் பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்ட தமிழினம் அதை எதிர்த்துப் போராடி, தலைவர் பிரபாகரன் தலைமையில் ஒரு விடிவை எதிர்பார்த்திருக்கும் இவ்வேளையில், இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் இம்மாதம் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரவிருக்கும் மதமாற்ற தடைச்சட்டத்தினால் இங்கு மீண்டுமோர் மதவாத ஒடுக்குமுறை அத்திவாரமிடப்படுகிறது.

மதம், கடவுள் நம்பிக்கை என்பன ஒருவரின் அடிப்படை உரிமையாகும். யாரையும் கட்டாயத்தினாலோ, சட்டத்தினாலோ ஆன்மீகரீதியாக விருப்பமில்லாத கடவுளையோ, மதத்தையோ ஏற்றுக்கொள்ளவைக்க முடியாது. அப்படி ஏற்றுக்கொள்ள வைத்தாலும்கூட சில காலத்திற்கு மட்டுமே அப்படி வைத்திருக்கமுடியும். எனவே இச்சட்டம் இங்கு தேவையற்றதாகின்றது. மத சுதந்திரமுடைய இந்நாட்டில் ஒருவர் தான் விரும்பிய மதத்தை பின்பற்றவோ, அம்மதத்தைப் பற்றி அறிந்துகொள்ளவோ உரிமை உண்டு. இச்சட்டத்தினால் அந்த உரிமை பறிக்கப்படுகின்றது. உரிமைகளை சட்டத்தால் நசுக்கி வெற்றிபெறமுடியாது.

ஈழத் தமிழரின் அவலங்களையெல்லாம் காலில் போட்டு மிதித்தபடி தர்பார் ஆட்சி நடத்தும் ஜெயலலிதா, தனது ஆட்சியில் பல்வேறு எதிர்ப்புக்கும் மத்தியில் அரங்கேற்றியிருக்கும் மற்றுமோர் அலங்கோலம்தான் இந்த கட்டாய மதமாற்ற தடைச் சட்டம். அது அங்கு ஆரம்பத்திலேயே பலத்த தோல்வியை சந்தித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனை அடிவருடி இங்கும் கொண்டுவர முயற்சிக்கும் ஐ.தே.கட்சி அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள், மத வேறுபாடுகளின்றி ஒன்றுபட்டுப் போராடிவரும் தமிழினத்துள் ஒரு பூசலை ஏற்படுத்தி இங்குமோர் குழப்ப நிலையை ஏற்படுத்த வழிகோலுகின்றார். இதற்கு சிங்கள பேரினவாதமும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றது.

எனவே, இதனை இங்குள்ள புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் மதக்கண்ணோட்டத்திற்கு அப்பால் தமிழ் மக்களின் எதிர்கால சுபீட்ச வாழ்வை நோக்கிய தீர்க்கதரிசன பார்வையுடன் நோக்கி இச்சட்டத்தை எதிர்க்க முன்வரவேண்டும். மத வேறுபாடுகளின்றி விடுதலைப் போராட்டத்தில் பங்களித்துவரும் சிறுபான்மை மத மக்களின் நம்பிக்கைக்கு ஊறுவிளைவிக்கும் இச்செயற்பாட்டை விடுதலைப் புலிகளும் நேர்மையுடன் கண்டித்து இச்சட்டத்தைத் தடைசெய்ய வேண்டும். இதுவே எதிர்காலத்தில் சாதி, இன, மத பேதமற்ற ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப அத்திபாரமாக அமையும்.

*நல்லூர்.* - கு.ஜெயம்.

## தொலைபேசி பாவனையாளரின் காதிலே பூ சுற்றுகின்றனரா?

யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசியை அறிமுகப்படுத்திய சில வாரங்களின் பின்னர் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் வயிற்றிலே பால் வார்த்தால் போல் ஒரு செய்தி பத்திரிகைகளில் உலாவரத் தொடங்கியது. அதாவது "புத்தாண்டு முதல் 01.01.2003ஆம் திகதியிலிருந்து கையடக்கத் தொலைபேசிகளில் உள்வரும் அழைப்புகளுக்கான கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது" என்பதுதான் அந்த இனிய செய்தி. அந்தப் புத்தாண்டும் வந்தது. வாடிக்கையாளர்களின் எண்ணம் நிறைவேறியதாக இல்லை. சில நாள்கள் போக இலங்கையில் உள்ள நான்கு கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களில் மூன்று நிறுவனங்கள் கூட்டாக (யாழ்நகரில் இயங்கும் இரண்டு நிறுவனங்கள் உட்பட) கொழும்பு பத்திரிகைகளில் ஓர் அழகான அரைப்பக்க விளம்பரத்தை வெளியிட்டன. அதாவது "சகல வெளிச்செல்லும் அழைப்புகளுக்கும் 05.02.2003 ஆம் திகதியிலிருந்து நிமிடத்திற்கு ஒரு ரூபா (1/-) வீதம் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்" என்று. அதிலும் ஒரு சின்ன இரக்க மனப்பான்மையை நிறுவனங்கள் காட்டின. உள்வரும் அழைப்புக் கட்டணங்களில் மாற்றம் ஏதும் செய்யப்படமாட்டாது. எப்படி இந்த வேடிக்கை? உள்வரும் அழைப்புகளை இலவசமாக அனுபவிக்க இருந்த வாடிக்கையாளர்களின் எண்ணத்தில் மண்ணைப் போட்டது மட்டுமன்றி வெளிச்செல்லும் அழைப்புகளிலும் வாடிக்கையாளரை மேலும் சுரண்டும் செயல் அல்லவா இது? இதைக் கேட்க யாருமில்லையா?

*சாவகச்சேரி* - ஜெயா.

## ஓய்வுபெற்ற அதிபரின் ஆதங்கம்

11.02.2003 உதயனில் வெளிவந்த செய்தியின்படி ஊர்காவற்றுறை ஓய்வூதியர்களின் சங்கம், ஓய்வூதியர்களின் அவல நிலையை உள்ளவாறு எடுத்துக்கூறி தீர்மானம் நிறைவேற்றியனுப்பி நிவாரணம் கோரியிருந்தது. அது பாதிப்புற்று வருந்துவோருக்கு உதவ எடுத்துக்கொண்ட ஒரு நன் முயற்சியே. அழுதபிள்ளைதான் பால் குடிக்கும் என்பது கண்கண்ட உண்மை. ஏனைய தொகுதிச் சங்கங்களும் இந்த அநீதிக்குக் குரல் கொடுத்து நியாயங் கிடைக்கச்செய்வார்களா? பாதிக்கப்பட்ட ஓய்வூதியக்காரர்களும் வாய்மூடி மௌனிகளாய் இராது குரல் எழுப்பி முயன்றால்தான், அநீதி மேலதிகாரிகளுக்குப் புலப்பட்டு நீதி கிடைக்க வழி பிறக்கும்.

பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். 1979இல் ரூபா 730/=ஐக் கடைசிச் சம்பளமாகப் பெற்று, பல சம்பள மீளாய்வுகளின் பின் 2002இல் நான் பெற்று வந்த ஓய்வூதியம் ரூபா 5,144/= ஆயினும் சமதராதரத்தையும் சமசேவையையுமுடைய ஓர் அதிபர் 2002இல் ஓய்வூதியம் பெறும்போது எடுத்த ஓய்வூதியம் ரூபா 8,000/=. அப்பொழுது அவர் எடுத்த கடைசிச்சம்பளம் ரூபா 9,000/=. இவ்வளவு ஏற்றத்தாழ்விற்குக் காரணம் ஓய்வூதியத்திட்டம் வகுப்பவர்கள் கடைசிச் சம்பளத்தை மையமாகக் கணிக்கும் போது 1979இல் 730/=இன் பெறுமதி 2002இல் கடைசிச் சம்பளம் 9,000/= இற்குச் சமமான தன்மையைக் கவனத்திற்கொள்ளாமையே. ஓய்வூதியம் பெறும் புதியவர்களும் தமது ஓய்வூதியநிலை திருப்தியானதைப் பார்த்து திருப்தியடைந்தனர். தாமும் பிற்காலத்தில் பாதிக்கப்பட்டவர் என்பதைச் சிந்திக்கவில்லை. பாதிக்கப்பட்ட வயோதிபர் சிறு எண்ணிக்கையாகவும், வயோதிபத்தன்மை எய்தியும், முயற்சி செய்யாமலும் இருந்தமையே இந்த அநீதிக்குக் காரணங்களாம்.

இன்னும் இந்த அநீதிக்கு ஓர் உதாரணம்: 1960இல் எனது பாடசாலையில் என்னிடம் முதலாம் வகுப்பிற் சேர்ந்த மாணவி, ஆசிரியையாகி 2002 இல் ஓய்வூதியம் பெறும்போது நான் ரூபா5,144/=ஐ எடுக்க அவர் ரூபா 8,000/= எடுக்கத்தக்கதாக அமைந்த திட்டம்.

எமது அவலநிலையை நீக்க உரிய நடவடிக்கையை மேலதிகாரிகள் கவனத்திற் கொள்வார்களா?

*பாதிக்கப்பட்ட ஓர் அதிபர்.* - ஆ.கதிர்காமத்தம்பி.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

11-03-2003

HAPPY BIRTHDAY



### செல்வன் க.கம்ஷத்வன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த *கந்தராசா - பாமநளினி* தம்பதிகளின் செல்வப்புதல்வன் **க.கம்ஷத்வன** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (11-03-2003) செவ்வாய்க்கிழமை ஏழாலை தெற்கு. சுன்னாகத்திலுள்ள தனது தாத்தாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா. அம்மா. அம்மம்மா. பெரியம்மா. சீனியம்மா. சீனியப்பா. சித்தப்பா. சித்திமார். மாமாமார். மாமிமார் அனைவரும்

**கம்ஷத்வனை**

நல்லை முருகன் அருளால் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் நலமோடும் வளமோடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(15491)

தகவல்:
கந்தராசா (அப்பா)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 11 - 11 - 1922



உதிர்வு 09 - 02 - 2003

### அமரர் சிவப்பிரகாசம் வேலுப்பிள்ளை

*(ஓய்வு பெற்ற பயிற்றப்பட்ட தொழில்நுட்ப சேவையாளர்)*

திதி:- 11.03.2003

*அன்பின் திருவுருவே! பண்பின் இருப்பிடமே ஐயா!*
*ஆதரவாக அரவணைத்து ஆளாக்கிய தெய்வமே!*
*என்றும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில்*
*நீங்காது நின்று நிழலாடி நினைவூட்டும்.*

(15493)

அன்னாரின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*15 ஆம் கட்டை வீதி,*
*உடுப்பிட்டி தெற்கு,*
*உடுப்பிட்டி.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 - 05 - 1954



உதிர்வு 09 - 02 - 2003

### அமரர் சின்னவன் இராசசுந்தரம்

**(வீரன்)**

வளர்மதி மண்ணில் வந்துதித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
தளர்ந்துபோன எம் மனங்களுக்கு
இனி ஆறுதல் தருவது யார்... அப்பா?

**09.02.2003 அன்று இந்திய மண்ணில் காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

*வளர்மதி வீதி,*
*கைதடி மத்தி,*
*கைதடி.*

(15492)

தகவல்:
இ.சசிகுமார் (மகன்)
திரு. சி.சின்னத்தம்பி குடும்பத்தினர்.

---

## நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

### திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

எமது வீட்டிற்கு திரு.பிரபாகரன் அடிக்கடி வந்து செல்வார். உத்தியோக ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அவரது விஜயம் அமையும். அவர் தனியே தனது மெய்ப் பாதுகாவலர்களுடன் வருவார். மற்றும் சமயங்களில், தனது குடும்பத்தினருடன் வருவார். அப்பொழுது 1998ஆம் ஆண்டின் மத்திய காலம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று நாயகனான திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனை அறிந்து பழகி, சேர்ந்து வாழ்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்த நீண்ட காலகட்டத்தில், தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் கொண்டிருந்த உறவும், அதனால் அவருடன் சேர்ந்து பகிர்ந்த ஆழமான அனுபவங்களும் அவரைப் புரிந்துகொள்ள ஏதுவாக அமைந்தன. அதாவது, இலங்கைத் தீவின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்கும் வல்லாற்றலுடைய ஒரு மாமனிதனின் மிகவும் சிக்கலான ஆளுமையை புரியக்கூடியதாக இருந்தது.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும், பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்:

**பக்கங்கள்: 479** **விலை 500/-**

---

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல.3474779 இருந்து
3492633 வரை
சீட்டிழுப்பு இல. 1382
திகதி 08.03.2003



### வெற்றி எண்கள்

**02 07 08 47 51**

போனஸ் எண் **45**

### ஜக்பொட் பரிசு

**ரூபா.2,418,500/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,418,500/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 104 | 10,000/- | 1,040,000/- |
| 3 | 5,518 | 500/- | 2,759,000/- |
| 2 | 91,581 | 20/- | 1,831,620/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 112,707 | 10/- | 1,127,070/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,957,690/-

### இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
## ரூபா.3,287,350/-

தொடர் இல. 2495536க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 12ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3485010-2-36**
**3491337-3-01**
**3479424-3-78**
**3489465-2-47**
**3477576-8-59**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M




**பஜாஜ்** இலங்கையில் முன்னணியாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

சக்தி, கவர்ச்சிகரமான வடிவமைப்பு, நம்பகத்தன்மையைப் பற்றி நாம் அனைவரும் நினைப்பதுண்டு... நவீன தொழிநுட்பத்துடன் அதிக சக்தியுடைய 150 சிசி என்ஜீன் கொண்ட பஜாஜ் பள்சர் உங்கள் மனதை நன்கறிந்த எங்கள் காலத்திற்குரிய மோட்டார் சைக்கிள்.

ரூபா. 107,835/-
மேற்படி விலை அனைத்து வரிகளும் புறநீங்களானது.

அது மட்டுமல்ல... உங்கள் நம்பிக்கையை என்றும் பாதுகாக்கும் வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி மற்றும் நாடு முழுவதும் பரந்து காணப்படும் சேவை, உதிரிப்பாக முகவர்கள் வலைப்பின்னலூடாக உங்கள் சேவைக்கு தயார் நிலையில். இப்போது நீங்களும் அனைத்தையும் முந்திக்கொண்டு முன்னணியில்...

தன்னிகரற்ற உத்தரவாதம்

- 150 கிகி 4 ஸ்ட்ரோக் என்ஜீன்
- டிஸ்க் பிரேக் (உலக புகழ்பெற்ற இத்தாலி நாட்டு பிரம்போ கம்பனியின் வடிவமைப்புடன்)
- 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு
- கிக் மற்றும் இலக்ரிக் ஸ்டாட்டர்
- 18 லீட்டர் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி (3 லீட்டர் ரிசவ்)
- வேகமானி, ட்ரிப் மீட்டர், எரிபொருள் சுட்டி மற்றும் கவர்ச்சிகரமான டெல்டேல் விளக்குகளுடன் (Telltale light)
- சைட் ஸ்டேன்ட் சுட்டி காட்டி
- பக்க உறைகள் (Side covers) இரண்டிற்குமான பூட்டு

விசேட கொடுப்பனவு!
ICC கிரிக்கட் போட்டியை முன்னிட்டு பெப். 5 முதல் மார். 23 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளுடனும் ஹெல்மட், ஜக்கட் மற்றும் ரைடர் Bag ஒன்று இலவசம்.

DPMC
## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி டிரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777 – 979279

Mal Ads

# எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி தென்னிந்திய சினிமா தயாரிக்கப்படுகிறது

## குற்றஞ்சுமத்துகிறார் மகளிர் அரசியல் பொறுப்பாளர்



யாழ்ப்பாணம்,மார்ச்11

தென்இந்திய இயக்குநர்கள் சிலர் எமது விடுதலைப் போராட்டத்தின் நோக்கத்தை கொச்சைப்படுத்தும் வகையில் திரைப்படங்களைத் தயாரிக்கிறார்கள் எமது போராளிகளின் உணர்வுகளோடு விளையாட முனைகிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி.

உலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு கடற்புலிகளின் ஆதரவுடன நிதர்சனம் மகளிர் பிரிவு வழங்கிய 'உப்பில் உறைந்த உதிரங்கள்' முழு நீளத் திரைப்பட வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. புலிகளின் யாழ்மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கே.கலைவிழி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய தமிழினி மேலும் கூறியதாவது:-

தென் இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற திரைப்படங்களின் மிகைப்படுத்தப்பட்ட கற்பனைகள் காரணமாக எமது மக்கள் மத்தியில் பலவித சமூகப் பிரச்சினைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

தென் இந்திய இயக்குநர்கள் சிலர் எமது விடுதலைப் போராட்டத்தை தமது கற்பனைகளுடன் கலந்து திரைப்படங்களாகத் தயாரித்து போராட்டத்தின் நியாயத்தன்மையை கொச்சைப்படுத்துகிறார்கள். எமது போராளிகளின் உணர்வுகளோடு விளையாடுகின்றார்கள்.

யுத்த தளபாட வழங்கல் வேலைகளை மட்டும் செய்துவந்த 'கடற்புறா' பின்னர் கடற்புலியாக மாறி தற்பொழுது பெரும் மகளிர் படையணிகளையே கொண்டுள்ளது. பெரும் தரையிறக்கங்களைச் செய்து படை முகாமைக் கைப்பற்றும் வரைக்கும் மகளிர் அணி வளர்ச்சி பெற்றுள்ளது.

கடற்கரைக்குச் செல்வதே பெண்களுக்கு ஆகாதது என்ற கருத்துடைய பிற்போக்குச் சமூகத்தை மாற்றியமைத்துள்ளார் எமது தலைவர் பிரபாகரன். வீரத்தில் குஞ்சென்றும், மூப்பென்றும் இல்லை என்று பாரதி பாடினான். வீரத்தில் ஆணென்றும் பெண்ணென்றும் கூட வேறுபாடுகிடையாது.

போராளி குயிலினி இயக்கியுள்ள இவ்வீடியோப் படத்தில் கற்பனைகள கலக்கவில்லை. இது எமக்கென்றே திரைப்படங்களை உருவாக்கும் முயற்சியின் ஆரம்பம். இவ்வாறு தமிழினி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஒளிக்காவியத்தை தமிழினி வெளியிட்டு வைத்தார். முதல கௌரவப்பிரதிகளை போராளி யமுனா வழங்க, அருட்தந்தை வண.பிதா சி.ஜெ.ஜெயக்குமார் அடிகளாரும், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவத் தலைவி திருமதி சுபாஸ்கரனும் பெற்றுக்கொண்டனர். மதிப்பீட்டுரையை திரைப்பட விமர்சகர் எஸ்.யேசுராஜா, யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜெயரஞ்சினி ஆகியோர் நிகழ்த்தினர்.

முன்னதாக நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகச்சுடரினை மாவீரர் கடற்புலி சோபனாவின் தந்தை ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை போராளி கல்யாணியும்-

மண்டபச் சுடரினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் ஏற்றி வைத்தனர். புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையாற்றினார். (எ-9)

# தமிழீழ வரலாற்று தேர்வில் வெற்றி பெற்றோர் விவரம்

கிளிநொச்சி,மார்ச்11

தமிழீழக் கல்விக் கழகத்தால் நடத்தப்பட்ட தமிழீழ சமூகக்கல்வி வரலாற்றுத் தேர்வின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவிருக்கின்றது.

வெற்றியீட்டிய மாணவர்களை அன்று மதியம் 12 மணிக்கு முன்பாக சமுகம அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர் விவரம் வருமாறு :-

தரம் 6

மெ.விஜிதா (முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்), ம.மனோச் சமில்டன் (முல்லைத்தீவு, வலயன் மடம் அ.த.க. பாடசாலை), ஜெ.தினேஸ் (வடமராட்சி, உடுத்துறை ம.வி.)

தரம் 7

உ.அனுராஜ் (கிளிநொச்சி, பூநகரி ம.வி.), கு.ஆனந்த் (முல்லைத்தீவு, கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை), யோ.அபிராமி (முல்லைத்தீவு, தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை),

தரம் 8

ப.ஜீவராஜன் (துணுக்காய், மாங்குளம்), ம.பார்த்தீபன் (முல்லைத்தீவு, தண்ணீரூற்று சி.சி.த.க. பாடசாலை), கு.பிந்துஜா (முல்லைத்தீவு, தண்ணீரூற்று சி.சி.த.க. பாடசாலை)

வலய ரீதியில் சான்றிதழும் பரிசும் பெறுவோர் விவரம்:

தரம் 6

சி.ரஞ்ஜீவன் (கிளிநொச்சி ம.வி.), யோ.கௌதமன் (கிளிநொச்சி ம.வி.), அ.ரேணுகா (கிளிநொச்சி, அக்கராயன் ம.வி.), சே.நிசாந்தினி (முல்லைத்தீவு, வலயன்மடம் அ.த.க. பாடசாலை), நி.ருசிக்கா (முல்லைத்தீவு கலைமகள வித்தியாலயம்), த.தயாபரன் (முல்லைத்தீவு, வலயன்மடம் அ.த.க. பாடசாலை), ம.லக்ஸ்ரெலா (மடு, இலுப்பைக் கடவை அ.த.க. பாடசாலை), ஜீஜீவசுலக்கி (மடு, இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை), சு.யோசப்வோல்டி சொய்சா (மடு, பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலை), வி.அனுசியா (துணுக்காய், மல்லாவி மத்திய கல்லூரி), வி.தர்சிகா (துணுக்காய், பாலிநகர் ம.வி.), கு.ஜெயந்தி (துணுக்காய், நட்டாங்கண்டல் வித்தியாலயம்), தோ.சர்மிளா (வவுனியா வடக்கு, மாறாஇலுப்பை அ.த.க. பாடசாலை), சௌ.பவிதா (வவுனியா வடக்கு விவேகானந்தா வித்தியாலயம்), கு.சுமங்கலி (வவுனியா வடக்கு பாரதி வித்தியாலயம்), செ.தினேஸ்குமார் (வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி இந்து வித்தியாலயம்), ர.மயூரன் (வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ம.வி.), க.அருள்தீபன் (வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ம.வி.)

தரம் 7

த.தவக்குமார் (கிளிநொச்சி ம.வி.), சர்மிலி (கிளிநொச்சி, முழங்காவில் ம.வி.), சி.வர்சினி (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலை), சி.வின்சன்போல் (முல்லைத்தீவு, வலயன் மடம் அ.த.க. பாடசாலை), ச.ஜீவனா (முல்லைத்தீவு, செம்மலை ம.வி.), ந.கஜந்தினி (முல்லைத்தீவு, விசுவமடு ம.வி.), ச.சுதர்சன் (மடு, இலுப்பைக் கடவை அ.த.க. பாடசாலை), ச.சிந்துஜா (மடு, பெரியபண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலை), க.ஜீவிதா (மடு இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை), து.சியானி (துணுக்காய், யோகபுரம் ம.வி.), சி.சரணியா நிதர்சினி (துணுக்காய், அனிச்சியங்குளம் அ.த.க. பாடசாலை), த.குலலோஜினி (துணுக்காய், யோகபுரம் ம.வி.), ப.சுதர்சன் (வவுனியா வடக்கு பாரதி வித்தியாலயம்), ஆ.ஜெனித்தா (வவுனியா வட்க்கு பாரதி வித்தியாலயம்), த.கந்தீபன் (வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை), ந.சத்தியா (வடமராட்சி கிழக்கு, ஆழியவளை சி.வி.த.க. பாடசாலை), கி.றெஜிப்ரியா (வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), ஜெ.குகெந்தினி (வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ம.வி.)

தரம் 8

ம.ரோகிலன் (கிளிநொச்சி, பூநகரி ம.வி.), த.சிறிஜீவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), அ.அனுருத்தன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), க.கேதாரணி (முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்), சி.அகிலன் (முல்லைத்தீவு, முள்ளியவளை அ.த.க. பாடசாலை), ப.மோகன்ராஜ் (முல்லைத்தீவு, செம்மலை ம.வி.), தி.ஜீவிதன் (மடு, இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை), வ.ஸ்ரீதேவி (மடு, பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலை), செ.டிலக்சனா (மடு, கருங்கண்டல் ம.வி.), வி.துஜிவா (துணுக்காய், விநாயகபுரம் வித்தியாலயம்), இ.பாமினி (துணுக்காய், மல்லாவி மத்திய கல்லூரி), த.தயாபரன் (வவுனியா வடக்கு, நெடுங்கேணி ம.வி.), து.திலீப்ரதன் (வவுனியா வடக்கு, ஒலுமடு அ.த.க. பாடசாலை), ப.கோகுலன் (வவுனியா வடக்கு, ஓமந்தை மத்திய கல்லூரி), தெ.கஸ்தூரி (வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ம.வி.), ர.றோசிகா (வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ம.வி.), சி.ஜீவதாஸ் (வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி இந்து மகாவித்தியாலயம்). (ம-ரி)


நியூ சயன்ஸ் அக்கடமி

நெல்லியடி

A/L. கணித, உயிரியல் பிரிவு-2005

இ.கணிதம் :-Mr.செந்தில்ராஜ்
பௌதிகம் :-Mr.குகன். Mr.குலம், Mr.பிரபா
இரசாயனம் :-Mr.மணியம், Mr.அன்பு
உயிரியல் :-Mr.நாகநாதன், Mr.தற்பரன்
பொது ஆங்கிலம்: Mr.நிஷாந்தன

(15496)

வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகிறது.



French மொழி வகுப்பு

யாழ். மக்களின் வசதி கருதி யாழில் ஆரம்பமாகிறது.
எழுத, பேச, வாசிக்க
3 மாத பேச்சுப்பயிற்சி

ஆசிரியர்
ஸ்ரீ இந்திரகுமார் CAP

ஆரம்பம் 12.03.2003 காலை 10 மணி.
★ நேரசூசி வசதிக்கேற்றமுறையில மாற்றப்படும்.
★ வரையறுக்கப்பட்ட அனுமதி.

NEW COLLEGE OF HIGHER STUDIES
ARIYAKULAM JUNCTION, JAFFNA.
(15406) T.P.: 505642


## சீருடைத்துணிகளில் ஒருதொகுதி வந்தது

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகளில் ஒரு தொகுதி நேற்று எடுத்து வரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள சீருடைத்துணிகள் உடனடியாக ஏனைய சங்கங்களுக்கும் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இன்றையதினம் கல்வி அமைச்சா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் - பாடசாலைகள் ஆரம்பமாகி இரண்டரை மாதங்கள் கடந்த நிலையில்- ஒருதொகுதி சீருடைத்துணிகள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(முன்னர் வந்த செய்தி III ஆம் பக்கத்தில்) (ஓ-86)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி.மார்ச்11

பளை, சோரன்பற்று கணேசா வித்தியாலய மெய்வன்மைப் போட்டி 17ஆம் திகதி திங்கட்கிழமை வித்தியாலய மைதானத்தில் அதிபர் க.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாள் ப.அரியரத்தினம் கலந்துகொள்வார். (ஓ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்11

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக ஒய்வுபெற்ற மருத்துவ அதிகாரி டாக்டர் எம்.யோகீஸ்வரதேவன் கலந்துகொள்வார். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம்.மார்ச்11

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்கலவன் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஓ-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்11

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை றோ.க.த.க.வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை முற்பகல 10 மணிக்கு அதிபர் நா.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

தீவகவலயப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஓ)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

இன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருந்தயாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் நடைபெறும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும அவர் தெரிவித்தார். (ஓ-10)

## விளையாட்டு பயிற்சி முகாம்

யாழ் நகரில் கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்ட, கபடி, மெய்வன்மை, ஹொக்கி ஆகிய விளையாட்டுகளுக்கான பயிற்சிமுகாம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை யாழ்.பரியோவான் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு தேசிய வியைாட்டு, விஞ்ஞானத்துறை, நிறுவனத்தினால் நடத்தப்படும் இந்த முகாமில் பயிற்சிகளை அளிப்பதற்காக பல்துறை சார்ந்த 13 பயிற்றுநர்கள் வருகின்றனர்.

இந்தப்பயிற்சி முகாமுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை அன்று காலை 8மணிக்கு தமது பயிற்சிக்குரிய உடைகளுடன் சமுகம் அளிக்கும்படி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ரூபசிங்கம் கேட்டுள்ளார்.

## கரவெட்டியில் மீண்டும் திருச்சொரூப வழிபாடு

கரவெட்டி பங்கில் கடந்த சில வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் திருச்சொரூப வழிபாடு ஆரம்பமாகியுள்ளது.

இப்பங்கைச் சேர்ந்த சிலர் இவ் வழிபாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தததை தொடர்ந்து சிலவருடங்களாக திருச்சொரூப வழிபாடு இடம்பெறவில்லை.

கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனிதாஸ் எடுத்துக்கொண்ட முயற்சியையடுத்து இப்பங்கில் திருசசொருப வழிபாடு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

யாழ்.ஆயர் வண. தோமஸ்சவுந்தரநாயகம் கரவெட்டி பங்கு மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் தற்போதைய சமாதான ஆண்டை முன்னிட்டு இல்லங்கள் தோறும் பத்திமா மாதா திருச்சொருப வழிபாட்டை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கரவெட்டிப் பங்கில் இல்லங்கள் தோறும பத்திமா மாதா திருச்சொருப வழிபாடு நடைபெற்று வருகின்றது. (எ-173)



தவறிவிட்டது

"3 வெள்ளித் திறப்புகள் அடங்கிய முக்கிய சாவிக்கோர்வை யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தோர்
அமுல் கிறீம் ஹவுஸ்
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
ஒப்படைத்து உதவவும்.

(15409)


## கண்ணீர் அஞ்சலி



டாக்டர் சிவா வேலாயுதம் அவர்கள்

10.03.2003 காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்ினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நயினாதீவு.* (15414) உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் சிவக்கொழுந்து வேலாயுதம்

(சிவா வேலாயுதம்)

நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த டாக்டர் செல்வி சிவக்கொழுந்து வேலாயுதம் அவர்கள் நேற்று (10.03.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - சீனிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், நாகமுத்து கனகரெத்தினம் (கணக்காளர்), ஐயாச்சாமி, விசாலாட்சி (ஆசிரியை) மற்றும் இராசம்மா (கனடா), லட்சுமி (சட்டத்தரணி, கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நயினாதீவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐஸ்வரியம்,*
*3ஆம் வட்டாரம், நயினாதீவு.* (15413)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி வினோதினி அஜீவன்

உடுவிலைச் சேர்ந்த திருமதி வினோதினி அஜீவன் நேற்று (10.03.2003) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அஜீவனின் (விவசாயபீட இறுதியாண்டு மாணவன்) அன்பு மனைவியும் போசகுலேந்திரன் - நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மகளும் நிலானி, அகிலன், அசோக் ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைசிங்கம் - சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மருமகளும் திருமதி அனிதா தயாபரன், அயூரன் ஆகியோரின் மைத்துனியும் விதுஷனின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோமராந்தோட்டம்,*
*உடுவில் கிழக்கு.* (15415)

தகவல்: குடும்பத்தினர்.

# களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் 16 கைதிகளின் உடல்நிலை படுமோசம்

## சிகிச்சை பெறவும் அவர்கள் மறுப்பு

கொழும்பு,மார்ச்11

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகளின் 16 பேரின் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது.

தொடர் பட்டினியால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 16 கைதிகளுக்கும் 'சேலைன்' ஏற்றுவதற்குச் சிறைச்சாலை வைத்தியர்கள் முயற்சித்த போதும் அவர்களில் சிலருக்கு மட்டுமே 'சேலைன்' ஏற்ற முடிந்ததாகத் தெரியவருகிறது. ஏனையோர் தமது போராட்டத்துக்கு முடிவு வரும்வரை எந்தவித வைத்திய சிகிச்சைக் கும் உட்பட மாட்டோம் என்று மறுத்துவிட்டனர். கைதிகளில் ஒருசிலரைத் தவிர ஏனையோர் மயக்கமடைந்துள்ளனர்.

படையினரால் கைது செய்யப்படும்போது கடும் சித்திரவதைக்குள்ளாகி சிறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுவந்த சில கைதிகளின் உடல் நிலையே தற்போது மிகவும் மோசமாகியுள்ளது.

உண்ணாவிரதத்தால் இரத்த வாந்தியெடுத்து வந்த பலர் மயக்க நிலையில் உள்ளனர். சிறை அதிகாரிகள் கைதிகளில் பலரை களுத்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முயற்சித்தபோதும் அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆகியோர் கைதிகளின் போராட்டத்துக்குப் பதில்தரப் பத்து நாள்கள் அவகாசம் கேட்டிருந்தனர்.

அவர்கள் தந்த காலக்கெடுவுக்குள் உண்ணாவிரதிகளில் உயிருடன் எஞ்சியிருப்போர் விடுதலை செய்யப்பட, உண்ணாவிரதமிருந்து இறந்தவர்களின் ஆத்மா சாந்தி யடையும் என்று உண்ணாவிரதிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# அமெ. தூதர் இன்று வருகிறார்

அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ். வருகைதரவுள்ளார்.

காலை 11 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் மதத் தலைவர்களை அவர் சந்திக்கவுள்ளார். யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை குருமுதல்வர் அருட்திரு. நேசகுமார், அருட்திரு. ஏ.ஐ.பேர்ணாட், மௌலவி அப்துல் நஸார், நாகவிகாரை பௌத்த குரு வணக்கத்துக்குரிய குணரத்ன தேரர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் பின்னர் பிற்பகல் 1 மணியளவில் யாழ்.பீச் இன் ஹோட்டலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ள தூதுவர் பிற்பகல் 1.45 மணிக்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார். இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே. சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (ம-8)

## இந்தியா கிண்ணத்தை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுமாப்புடன் முன்னேறிக்கொண்டுள்ளது.

இத்தருணத்தில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அனைத்துமே "இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவும், இந்தியாவும் மோதும். அதற்கு இந்திய அணிக்கு தகுதி இருக்கிறது. அப்படி நடந்தால், இந்திய அணியால் மட்டுமே ஆஸ்திரேலியா அணிக்கு கடும் சவாலை கொடுக்க முடியும்" என்று குறிப்பிட்டுள்ளன.

"இந்திய அணியினர் ஒரு நேரத்தில் சோர்ந்து போய் அப்பாவிகளாக இருப்பார்கள் சவால் என்று வந்துவிட்டால் அவர்களது பலம் அவர்களுக்கே தெரியாது' என்பது போல் ஆடுவார்கள்.

இந்திய அணியின் முதுகெலும்பே சச்சின் டென்டுல்கர் தான். அவரை வைத்துக்கொண்டு எதையும் சாதிக்கலாம்.

இந்தியா இறுதிச் சுற்றில் நுழைந்தால் ஆசிய கண்டமே அதன் பக்கம் இருக்கும். இப்படியோர் ஆதரவு கிடைக்கும் போது அந்த உந்து சக்தியிலேயே இந்திய வீரர்கள் முழு நம்பிக்கையுடன் விளையாடுவர்கள்.

-இவ்வாறு பெரும்பாலான பத்திரிகைகள் கூறியுள்ளன.

பல்வேறு பிரிட்டன் பத்திரிகைகள் இந்திய அணி பற்றி வெளியிட்டுள்ள செய்தியில் இருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

### த சண்டே டைம்ஸ்

இந்திய அணியின் 'கோஹினூர் வைரம்' சச்சின் டென்டுல்கர். அவர் இருக்கும் போது இந்திய அணி மாபெரும் வெற்றியைப் பெறும். கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை ஓட ஓட விரட்டியது போல், சச்சின் ஆட்டம் நன்றாக அமைந்து விட்டால் இந்தியாவின் தாக்குதலை யாரும் கட்டுப்படுத்த முடியாது. எந்த பந்துவீச்சாளரையும் தண்டிக்க கூடியவர் சச்சின் தான். இந்தப் போட்டித் தொடரில் அவர் ஆடி வரும் விதம் தொடர்ந்து நீடித்தால் வெற்றி இந்தியாவுக்குத் தான்.

### த இன்டிபென்டன்ட்

இந்தியா இறுதிச் சுற்றில் நுழைந்தால் ஆசியக் கண்டமே அதன் பக்கம் இருக்கும். இப்படி ஓர் ஆதரவு கிடைக்கும் போது அந்த உந்து சக்தியிலேயே இந்திய வீரர்கள் முழு நம்பிக்கையுடன் விளையாடுவார்கள். போதாக்குறைக்கு சச்சின் டென்டுல்கர் என்ற வெற்றித் தளபதியை வைத்திருக்கிறார்கள். வாழ்வா? சாவா? என்று வரும்போது, இந்திய வீரர்கள் ஆவேசத் தாக்குதல் நடத்தி கிண்ணத்தைக் பறித்துக் கொண்டு வருவார்கள் என்பதே உண்மை.

கடந்த ஆண்டு லண்டனில் நடந்த நட்வெஸ்ட் கிண்ணப் போட்டி இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணி எடுத்த 325 என்ற மிகப்பெரிய ஸ்கோரை இந்திய அணி வெற்றிகண்டதை மறக்க முடியாது என்பதையும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் குறிப்பிடத் தவறவில்லை. (ம)

## தென்னாபிரிக்கா...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் எண்ணிக்கையும் 3 ஆயிரம். சுப்பர்சிக்ஸுக்கு இந்தியா தெரிவாகிய பின்னர் இந்த எண்ணிக்கை மேலும் ஆயிரம் அதிகரித்துள்ளது.

இந்தியா இறுதிப் போட்டியில் விளையாடும் பட்சத்தில் தென்னாபிரிக்கா செல்லும் ரசிகர்களின் எண்ணிக்கை அதிகம் இருக்குமெனக் கூறப்படுகின்றது. இதற்கிடையில் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றால், போட்டியைப் பார்க்க தென்னாபிரிக்கா செல்வேன் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளதால் எதிர்பார்த்ததைவிட அதிக விமானங்கள் இயக்கவேண்டியநிலை ஏற்படும் எனத்தெரிகின்றது.

இலங்கை ரசிகர் குழு இந்தியாவுக்குச் சென்றுதான் தென்னாபிரிக்கா செல்கின்றனர். கொழும்பிலிருந்து நேரடி விமானசேவை *இல்லை. எனவே இலங்கை ரசிகர்களும் மும்பை வழியாகவே தென்னாபிரிக்காவுக்குச் செல்கின்றனர். (ம)

## ஆஸ்திரேலிய...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் தென்னாபிரிக்காவுடனான போட்டிக்கு முன்னர் கூறியது போன்று உலகக்கிண்ணத்தொடரில் சிறந்த அணியுடனேயே எம்மை பரீட்சிக்க விரும்புகிறோம்.

ஸிம்பாப்வே உடனான போட்டியில் எமது பந்துவீச்சாளர்கள் இறுதி மூன்று ஓவர்களில் 62 ஓட்டங்களைக் கொடுத்தமை மட்டுமே கவலைக்குரியது. எமது அணி முன்னேறிச் செல்லும்விதம் திருப்தியளிக்கின்றது - என்றார். (ம)

## 'வாழும் கலை' அமைப்பு உறுப்பினர் இங்கு வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்11

'வாழும்கலை' எனும் தென்னிந்திய அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது.

இக்குழுவினர் இங்குள்ள நலன் புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு ஆரோக்கிய மேம்பாடு தொடர்பான பயிற்சிகளை வழங்கவுள்ளனர். அத்துடன், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவர்.

இன்று இப்பயிற்சி யாழ்.செயலகத்தில் செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இக்குழுவில் 'வாழும்கலை' அமைப்பின் பயிற்சி இயக்குநர் கணேஸ், புற்றுநோய் நிபுணர் கலாநிதி வினோத் கொச்சிப்பிள்ளை 'பாங் ஒவ் இந்தியா'வின் உறுப்பினர் மாயா ரவீந்திரநாத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சின் மேலதிக செயலாளர் ரி.குமாரதாஸனும் வருகைதந்துள்ளார். (ம-10-8)

## சமிந்த...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் மூன்று பந்துவீச்சுக்களிலேயே ஹட்ரிக் வீழ்த்தி அவர் புதிய சாதனை படைத்தார்.

பாடசாலைப்பருவத்தின் போது கத்தோலிக்க பாதிரியார் ஆவதே எனது இலட்சியமாக இருந்தது. குருமார் மடத்திலும் சில மாதங்கள் பயிற்சி பெற்றேன்.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டி ஒன்றின் போது வழக்கமான பந்துவீச்சாளர் காயமடைந்தமையினால் இறுதி நிமிடத்தில் நான் அணியில் சேர்க்கப்பட்டேன் அப்போட்டியில் நான் ஹட்ரிக் பெற்றேன். இந்நிகழ்வு என் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்துவிட்டது.

- இவ்வாறு வாஸ் தெரிவித்தார்.

ஸிம்பாப்வேயுடனான போட்டி ஒன்றில் 19 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஒருநாள் போட்டி ஒன்றில் கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்திய உலக சாதனையாளராகவும் அவர் விளங்குகிறார்.

இந்த உலகசாதனையை நான் விரும்புகிறேன். எனினும் ஹட்ரிக்தான் விசேடமானது. ஏன்னெனில் நான் அதை உலகக்கிண்ணபோட்டியில் பெற்றேன்.

- இவ்வாறு வாஸ் மேலும் கூறியுள்ளார். (ம)

## மண்டியிட்டது...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு படுதோல்வி.

இந்திய வேகப் பந்துவீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத்தின் பந்துவீச்சில் இலங்கைத் துடுப்பாளர்கள் சுருண்டு மண்டியிட்டனர். தன் முதல் ஓவரிலேயே அத்தப்பத்து மற்றும் முபாரக் ஆகியோரின் விக்கெட்டுக்களைச் சரித்தார் ஸ்ரீநாத். தன் முதல் 5 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு அவர் சரித்தது 4 விக்கெட்டுக்கள்.

5 இலங்கைத் துடுப்பாளர்கள் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வாத்து ஆனார்கள். இந்தியாவின் இலகுவான வெற்றிக்கு அவர்கள் தாமாக உதவினார்கள். அவர்களில் ஒருவர் ஜெயவர்த்தன என்பது சொல்லவேண்டியதில்லை.

தன்வசம் இருந்த மூன்று வேகப் பந்துவீச்சாளர்களை மட்டும் வைத்துக கொண்டு கங்குலி இலங்கை யைக் கவிழ்த்துவிட்டார். அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 23 ஓவர்களில் இலங்கையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதற்கு முன்னரே முடிந்திருக்கும். முரளியும் தில்காரவும் இந்திய வேகங்களுக்குக் கொஞ்சம் போக்குக் காட்டினார்கள். அவர்கள் புண்ணியத்தில் 100 ஓட்டங்களை யாவது தாண்டிற்று இலங்கை.

செய்வதற்குப் பதிலாக செத்து மடிந்திருக்கிறார்கள் இலங்கையர்கள்.

நேற்றைய ஆட்டத்தில் சச்சின் - ஷேவாக் ஜோடியின் ஆரம்ப ஆட்டம் அபாரமானது. இரண்டாவது ஓவரிலேயே - நிஸங்கவின் ஓவர் - 'ஓவ் சைட்' இல் ஷேவாக் அடித்த சிக்ஸ் மிக மிக அழகானது. பின்னர் டென்டுல்கரும் அதேபோன்ற தொரு சிக்ஸ் விளாசினார். 97 ஓட்டங்களில் சச்சினின் ஆட்ட மிழந்தது துரதிர்ஷ்டம். இன்னும் கொஞ்சம் நிதானம் காட்டியிருக்கலாம் அவர். சதத்தை எட்டியிருந்தால் உலகக் கிண்ணப் போட்டிகளில் 5 சதங்களைப் பெற்றவர் என்ற சாதனையை அவர் படைத்திருப்பார். பரவாயில்லை. இன்றில்லாவிட்டால் நாளை அவர் அதனைச் செய்வார் என்று நம்பலாம்.

நேற்றைய தனது 97 ஓட்டங்கள் மூலம் உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் (571) பெற்றவர் என்ற சாதனையை சச்சின ஏற்படுத்தினார். 523 ஓட்டங்களைப் பெற்று இந்தச் சாதனையை 1996 இலும் அவரே நிகழ்த்தியிருந்தார். இப்போது தன் சாதனையை தானே முறியடித்துள்ளார். இப்போதைய சாதனை எல்லை இன்னும் உயரும்.

கடந்த ஆண்டில் மேற்கிந்தியாவுக்கான சுற்றுலா முடிந்ததும், அதில் சிறப்பாகச் செய்யாத ஸ்ரீநாத், தான் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆனால், கங்குலி அவரை மீண்டும் அணியில் சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். கடந்த வருடம் செப்ரெம்பரில் இலங்கையில் நடந்த ஐ.சி.சி கிண்ண போட்டியின் இறுதியில் அவர் மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இப்போது, இலங்கையுடனான ஆட்டத்தில் அவர் மூலம் வென்று (நேற்றைய ஆட்ட நாயகன் அவர் தான்) உலகக் கிண்ண அரையிறுதிக்குத் தெரிவான பின்னர், ஸ்ரீநாத்தின் ஓய்வு அறிவிப்பை மீள்பரிசீலனை செய்ய வைத்த தன் செயல் குறித்து கங்குலி தன்னைத் தானே பாராட்டிக் கொண்டுள்ளார்.

சச்சின், ஷேவாக், கங்குலி அதிரடியினாலும் ஸ்ரீநாத்தின் பந்துவீச்சினாலும் அரையிறுதி ஆட்டத்துக்குச் சென்றுவிட்டது இந்தியா. இறுதிவரையும்கூட அது செல்லக்கூடும்.

இலங்கை நாடு திரும்புவதா இலலையா என்பது கென்யா - சிம்பாப்வே ஆட்டத்தின் பின்னர் தெரிந்துவிடும்.

- PTP

## சரிவில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சரிவில் இருந்து மீள அவருக்கு போதிய உதவியை செய்து வருகிறோம்.

ஜயவர்த்தனவின் இந்த மோசமான விளையாட்டால் பிறரைவிட அவர் தான் மிகவும் கவலையுடன் இருக்கிறார்.

இருப்பினும் இது போன்ற சரிவுகள் சில சமயங்களில் ஏற்படுவது சகஜமே. இலங்கை அணிக்கு ஜயவர்த்தன ஒரு விசேட வீரர். அவரது பங்களிப்பை இலங்கை அணி பெருமளவில் இழந்துள்ளது.

கிரிக்கெட் உலகில் இருக்கும் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரருக்கும் இது போன்ற மோசமான நிலை வருவதுண்டு - என்றார். (ம)

## தலைமை....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எதிர்பார்த்த அளவுக்கு நாங்கள் விளையாடவில்லை. இதற்காக மக்கள் எங்களை மன்னிக்க வேண்டும். இது வருந்தத்தக்க விடயம்தான். ஆனால், நாம் கடுமையாகப் போராடினோம். எங்களைத் தவிர இதற்கு யார் மீதும் குற்றஞ்சாட்ட முடியாது" - என்றார் அணியின் மேலாளர் ஷார் யார் கான்.

"அணி முழுவதுமே உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடவில்லை. எங்களுடைய துடுப்பாட்டமும் சரியில்லை; பந்து வீச்சும் சரியில்லை. இதற்கெல்லாம் அணித் தலைவரை மட்டும் குற்றஞ்சாட்டுவது முறையில்லை. எங்களுக்கு மன்னிப்பே கிடையாது. எங்களால் நாட்டுக்கே தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. அதைப போக்கி மீண்டும் தலை நிமிரச் செய்வோம்.

"நான் தலைமைப் பொறுப்பில் நீடிப்பதா இல்லையா என்பதை அணித் தேர்வாளர்கள் மற்றும் கிரிக்கெட் சபை நிர்வாகிகள்தான் முடிவு செய்ய வேண்டும்"- இப்படி வக்கார் யூனுஸ் மேலும் சொன்னார். (ம)


**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த
**அவன் வருவானா** (தினம்)
10.30, 2.30, 6.30 மட்டும்
**U 571**
இரவு 9.30 மட்டும் 10-13 வரை

**நிறஞ்சனாஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், அருண்பாண்டியன், மீனா நடித்த
**தேவன்** (தினம்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
ஜக்கிஜான் நடித்த
RUSH HOUR - 2
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**லக்சுமி** இணுவில்
இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த
**பகவதி**
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த
**சூரியபார்வை** (தினம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் 7.00 மணிக்கு ஆங்கிலத் திரைப்படம்
M.I - 2
(சண்டைக்காட்சிகள் நிறைந்தது)

## மருந்து விற்பனைப் பிரதிநிதி தேவை
**[MEDICAL & SALE REPRESANTATIVE]**

ஆங்கில மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்து விநியோகம செய்யும் முதன்மை நிறுவனமான "ஜோர்ச் ஸ்ருவாட் ஏஜன்ஸி லிமிட்டெட்" *[GEORUE STEUARTS AGENCIES LTD.]* நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற, நல்ல தேக ஆரோக்கியமான, பிறருடன் நன்கு பழகும் தன்மைகொண்ட, சுறுசுறுப்பான இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்களது சுயவிவரத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ உடன் விண்ணப்பிக்கவும்.

இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் இங்குவந்து நேர்முகப்பரீட்சை நடத்தவுள்ளார்.

ஆகவே, காலம் தாழ்த்தாது உடன் விண்ணப்பிக்கவும்.

**WESCO (யாழ் மருந்தகம்)**
470 (250), மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. : 222 3188, Fax - 222 3188 (15416)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கம்

கைதடி கிழக்கைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கம் நேற்று (10.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லம், சுப்பிரமணியம் மற்றும் கந்தையா (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), வள்ளிப்பிள்ளை (கொழும்பு). செல்லத்துரை(சுவிஸ்), சண்முகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, K.S.கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), K.S.பொன்னம்பலம் (வெலிகம ஸ்ரோர்ஸ், கொழும்பு), யோகராணி (சுவிஸ்), ராயினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2003) செவ்வாய்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி கிழக்கு, கைதடி.* (சி-26898)

தகவல்: சி.சண்முகரத்தினம் (மகன்).

# யாழ்.வரும் கல்வி அமைச்சர் ராஜபக்ஷ பொது வைபவங்களில் பங்கேற்காராம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வரும் பாடசாலைகள் கல்வி அமைச்சர் கரநமல ராஜபக்ஷ பொது வைபவங்களில் பங்குபற்றமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க, ஆசிரியர் சங்கங்கள் முஸ்தீபு மேற்கொண்டதை அடுத்து இவர் பொது வைபவங்களை ரத்துச் செய்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குச் செல்லும் அமைச்சர் அங்குள்ள பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வார்.

பாடசாலை அதிபர்களை நல்லூர் குருகுலத்தில் நாளை சந்தித்து கணனிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை அவர் வழங்கவிருக்கிறார் என்று கூறப்பட்டது. (ம-3-10-8-51)

## வடக்கு - கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வேலைநிறுத்தத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், கல்வியியற் கல்லூரிகளின் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு வடமாகாண அதிபர் சங்கம், யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம், உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரிகள் சங்கம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம், வடமராட்சி பாலர் ஆசிரியர் சங்கம் ஆகியன உட்பட பல அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்து இன்று காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து யாழ். செயலகம் வரை பேரணி ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் விலாசமிடப்பட்ட மகஜர்கள் யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்படவிருக்கின்றன.

இப்பேரணியிலும் இன்றைய போராட்டத்திலும் அதிபர், ஆசிரியர்களைத் திரண்டு பங்குபற்றுமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்புவிடுத்துள்ளது.

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்

சிங்கர்

புதிய பார்வை

இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : இலங்கை

ஆட்டநாயகன் : ஜவகல் ஸ்ரீநாத்

முடிவு :183 ஓட்டங்களால் இந்தியா வெற்றி

### இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எஸ்.டெண்டுல்கர் | c/சங்கக்கார | b/டி சில்வா | .... 97 | 120 | 7 | 1 |
| வி.சேவாக் | c/டி சில்வா | b/முரளி | .... 66 | 76 | 5 | 3 |
| எஸ்.கங்குலி | | b/வாஸ் | .... 48 | 53 | 2 | 2 |
| எம்.கைவ் | | b/முரளி | .... 19 | 24 | 1 | 0 |
| யுவராஜ் சிங் | | b/வாஸ் | .... 05 | 06 | 0 | 0 |
| ஆர்.திராவிட் | not out | | .... 18 | 42 | 2 | 0 |
| டி.மொங்கியா | c/டி சில்வா | b/முரளி | .... 09 | 07 | 0 | 1 |
| ஹர்பஜன் சிங் | not out | | .... 07 | 05 | 1 | 0 |
| உதிரிகள் | | | .... 23 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... 292/6 | | | |

கவிழ்க்காதவர்கள் : ஏ.நேஹ்ரா, ஜே.ஸ்ரீநாத், ஷஹீர்கான்

வாஸ் : 8-2-34-2, நிசங்க : 6-0-49-0, டி சில்வா : 6-0-32-1, முரளிதரன் : 10-0-46-3. ஆர்னல்ட் : 5-0-30-0, திலகரத்ன : 10-1-61-0 ஜயசூரிய : 3-0-27-0.

### இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எம்.அத்தபத்து | c/ கைவ் | b/ஸ்ரீநாத் | .... 00 | 07 | 0 | 0 |
| எஸ்.ஜயசூரிய | c/ கைவ் | b/ஸ்ரீநாத் | .... 12 | 17 | 1 | 0 |
| ஜே.முபாரக் | c/ திராவிட் | b/ஸ்ரீநாத் | .... 00 | 02 | 0 | 0 |
| எம்.ஜயவர்த்தன | lbw | b/ஷகீர்கான் | .... 00 | 04 | 0 | 0 |
| டி. சில்வா | lbw | b/ஸ்ரீநாத் | .... 00 | 03 | 0 | 0 |
| கே.சங்கக்கார | c/யுவராஜ்சிங் | b/நேஹ்ரா | .... 30 | 33 | 4 | 0 |
| ஆர்.ஆர்னல்ட் | lbw | b/ஷகீர்கான் | .... 08 | 28 | 1 | 0 |
| எச்.திலகரத்ன | c/டெண்டுல்கர் | b/நேஹ்ரா | .... 09 | 15 | 1 | 0 |
| ஆர்.நிசாங்க | c/ கைவ் | b/நேஹ்ரா | ... 00 | 04 | 0 | 0 |
| டி.பெர்னாண்டோ | not out | | .... 11 | 10 | 2 | 0 |
| எம்.முரளிதரன் | c/கைவ் | b/நேஹ்ரா | .... 16 | 14 | 3 | 0 |
| உதிரிகள் | | | .... 13 | | | |
| மொத்தம் | (23 ஓவர்கள்) | | .... 109/10 | | | |

ஷகீர் கான் : 7-0-33-2, ஸ்ரீநாத் : 9-1-35-4, நேஹ்ரா : 7-1-35-4,


NANDI BRAND RUPIKA TILES



குறைந்த விலையில், நிறைந்த தரத்தில் ஓடுகள், முகட்டோடுகள், கற்கள் பெற்றுக்கொள்ள...

ARALIYA STORES
No.11, Negombo Road, Dankotuwa.
T.P. : 031-58174

RUPIKA TILES FACTORY
UDANGAWA, KOCHCHIKADE.
T.P. : 031-77346

No.6, HINDU LADIES LANE,
KANTHARMADAM, JAFFNA.
T.P. : 021-222 3268

(15334)

BEST QUALITY ROOFING TILES


## செயலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டன. வாகனங்கள் கச்சேரி - நல்லூர் வீதியூடாகத் திரும்பிச் சென்றன.

இப்போராட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், நரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம், சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டம் இடம்பெற்ற வேளையில், யாழ்.செயலகத்துக்குள் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை.

போராட்டத்தின் பின்னர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கைதிகளின் விடுதலை தொடர்பாக மகஜர்களும் அனுப்பிவைக்கப்பட்டன.(ம-10-8-51-86)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், கடற்படையினர் நால்வர் காயமடைந்தனர். தொடர்ந்து மோதல் வெடித்தது. இறுதியில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது - என்றார்.

சுமார் ஒரு மணிநேரம் கடற்சமர் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்கி அழிக்கப்பட்ட கப்பலில் அது எந்தநாட்டில் பதிவு செய்யப்பட்டது என்பதைக் குறிக்கும் கொடி பறக்கவிடப்பட்டிருக்கவில்லை என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. 'சைரா' என்ற கடற்படைக் கப்பலில் இருந்த அதிகாரி ஒருவரும் மற்றும் மூன்று சிப்பாய்களுமே உயிரிழந்தனர்.

புலிகளின் கப்பல் அழிக்கப்பட்டதில் அதிலிருந்த கப்பல் கப்டன் உட்பட புலிகளின் போராளிகள் பதினொரு பேரும் அழிக்கப்பட்டனர்.

சர்வதேசக் கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த தமது வர்த்தகக் கப்பல் வேண்டுமென்றே தாக்கி அழிக்கப்பட்டது பாரதூரமான செயல் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ம-3-12)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்களை அரச அதிபர்களிடம் மீனவர்கள் கையளித்தனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களை நிறுத்த இந்திய - இலங்கை அரசுகள் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (ம-3-12)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் அவசரப்பட்டு எந்த முடிவையும் கூறிவிட முடியாது. சர்வதேசச் சட்டங்களின் கீழ் சர்வதேசக் கடற்பரப்புகளில் உள்ள உரிமைகள் குறித்து நாம் இப்போது ஆராய்ந்து வருகின்றோம்.

ஒரு நாட்டுக்கு அதன் கடற்கரையை ஒட்டியுள்ள 12 கடல் மைல் பகுதி அதன் பாதுகாப்பின் எல்லை எனலாம். மற்றொரு விடயம் பொருளாதாரக் கடற்பரப்பு. இது மீன்பிடித் தொழில், கரையோர வளங்களைப் பயன்படுத்துவது போன்றவற்றுடன் தொடர்புடையது. என்றாலும், எல்லாக் கப்பல்களும் - அவை எங்கிருந்து வந்தாலும் - இப்பகுதியில் சுதந்திரமாகச் செயற்பட உரிமையுண்டு.

*கேள்வி:-* அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம், சர்வதேச கடற்பரப்பை இரு தரப்பும் பயன்படுத்துவது குறித்து ஏதும் கூறுகின்றதா?

*பதில்:-* இல்லை, எதுவுமில்லை.

*கேள்வி:-* அப்படி என்றால் இதில் தெளிவற்ற - மயக்கநிலை உள்ளதா?

*பதில்:-* அப்படி இருக்கக்கூடும். ஆனால், இந்தப் புரிந்துணர்வு மற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சர்வதேச சட்டங்களின் கீழ்தான் செய்யப்பட்டுள்ளது என்பதை நோக்குவது புத்திசாலித்தனமானது.

எனவே, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் வரும் ஏற்பாடுகள், பதப்பிரயோகங்கள் மற்றும் விடயங்கள் எல்லாம் சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளின் கீழ் அமைய வேண்டியவை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. - என்றார்.

# கப்பல் தாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இயன்ற - உயர்ந்தபட்ச அளவில் - தனது ஆட்சேபனையைப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றது.

எமது கப்பல் எந்தச்சட்ட விரோதச் செயல்களிலும் சம்பந்தப்படாததால் இந்தச் சம்பவத்தை மோசமான யுத்தநிறுத்த மீறலாக நாம் கருதுகின்றோம். அத்தோடு, இலங்கைக் கடற்படையின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட சர்வதேசக் கடற்பரப்பில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

எந்தவித ஆத்திரமூட்டல் நடவடிக்கையிலும் ஈடுபடாத நிலையில், எங்களது வர்த்தகக் கப்பல் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் நிகழத் தொடங்கியதும், அது சம்பந்தமாகக் கண்காணிப்புக் குழுவுடன் தொடர்புகொண்டு எமது ஆட்சேபனையைப் பதிவு செய்தோம்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்துகொண்டிருக்கும் சர்வதேசக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படைக்கு நியாயாதிக்கம் கிடையாது என்று கருத்து வெளியிட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரிஜிவ் ரெலிங்ஸன் எந்தவித மோதலும் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு தனது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகவும் எங்களுக்கு உறுதியளித்திருந்தார்.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் எமது கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்கியதால், கப்பல் கப்டன் உட்பட எமது உறுப்பினர்கள் பதினொருபேர் கொல்லப்பட்டனர்.

இந்த மோசமான சம்பவம் சமாதான நடவடிக்கைகளில் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்க, இலங்கைக் கடற்படை கொஞ்சக்காலமாக புலிகளுக்கு எதிராக - வேண்டுமென்றே ஆத்திரமூட்டும் பல சம்பவங்களில் - வெளிப்படையாக ஈடுபட்டுவருவதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பாக எங்களது கடும் அதிருப்தியைத் தங்களது அரசுக்குத் தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும், கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவருக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம)


## விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமம்

எதிர்வரும் 2003.03.18ஆம் நாள் இடம்பெறவுள்ள புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டுப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்த உள்ளோர் 2003.03.11ஆம் நாள் தொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் இடங்களில் விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

01) விழாக்காலச் சிறப்புச் செயலகம் - புளியம்பொக்கனை.

02) வருவாய்ப் பகுதிச் செயலகம் - விசுவமடு.

03) வருவாய்ப் பகுதிச் செயலகம் - கிளிநொச்சி.

அறிவித்தல்

வருவாய்ப் பகுதி, நிதித்துறை,

கிளிநொச்சி மாவட்டம்.

(15407)

## தொலைபேசி இயக்குநர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

தொலைத் தொடர்பு நிலையத்திற்கு

தொலைபேசி இயக்குநர் (பெண்/ஆண்) தேவை.

S.P. ENTERPRISES

தொடர்பு :- GLOBAL INFORMATICS (PVT) L.T.D

379, KASTHURIYAR ROAD, JAFFNA.

T.P. : 021 222 5735 -6

(15417)

LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/26668)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஈராக் மீதான போர் மூளும் சூழ்நிலையில்

# ஐ.நா.பாதுகாப்புச் சபைப் பிரேரணைக்கு ஆதரவு திரட்ட இருதரப்புகளும் முயற்சி!

லண்டன்,மார்ச் 11

ஈராக் மீது அமெரிக்கா சில தினங்களில் போர்தொடுக்கக் கூடிய சூழ்நிலையில், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஈராக் தொடர்பான பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதில் இரு தரப்பும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கைக்கு வழிசெய்ய அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை மீது இன்று செவ்வாய்க்கிழமை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

இந்தப் பிரேரணையை தோற்கடித்து ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை தடுத்துவிட ஐநாபாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவை முயற்சித்து வருகின்றன. தத்தமது தரப்புகளை வலுப்படுத்துவதற்காக ஐநாபாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் ஈராக் மீதான போரை எதிர்க்கும் நாடுகளும், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய போரை ஆதரிக்கும் நாடுகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளான அங்கோலா, கமரூன், கினியா ஆகியவற்றுக்கு பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் டொமினிக் டிவில்லயின் சுற்றுப் பயணம் செல்கிறார்.



குவைத்தில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர்.

தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன படுத்தி பிரேரணையைத் தடுப்பதிலும பார்க்க வாக்கெடுப்பில் பிரேரணையைத் தோற்கடிக்கவே பிரான்ஸ் விரும்புவதாக வில்லயின் கூறியுள்ளார்.

இதேவேளை, இப்பிரேரணைக்கு பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளில் 9 அல்லது 10 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க உள்ளதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

ஈராக் விவகாரம் தொடர்பான கடைசித் தகவல்கள் சில பின்வருமாறு

★ பேரழிவு ஆயுதங்களை ஈராக் முற்றாக அழிப்பதற்கு எதிர்வரும் 17 ஆம் திகதிவரை அமெரிக்காவும் பிரிட்டனும் கால அவகாசம் வழங்கியுள்ளதை ஈராக் முற்றாக நிராகரிப்பதாகவும் - ஆயினும் ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு தொடர்ந்து ஒத்துழைக்கப் போவதாகவும் - ஈராக்கின ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ஹோசம் மொஹமட் அமின் தெரிவித்துள்ளார்.

★ ஈராக் மீதான அமெரிக்காவின் போர்த் திட்டத்தை அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி காட்டர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

★ பிரச்சினைகளைத் தவிர்க்க பேரழிவு ஆயுதங்களை அழிப்பதற்கான கால அட்டவணை ஒன்றை ஈராக வெளியிட வேண்டும் என்று சவூதி அரே பியா வலியுறுத்தியுள்ளது.

★ ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவுக்குப் பிரிட்டன் துணை போவதைக் கண்டித்து பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவரும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை விட்டு விலகினர். இதேவேளை, ஐநாவின் அனுமதியின்றி ஈராக் மீது அமெரிக்கா தொடுக்கும் போருக்கு பிரதமர் ரொனி பிளயர் ஆதரவு அளித்தால தாம் அனைவரும் பதவி விலக நேரிடும் என சுமார் 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிளயருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஈராக்கில் பணியாற்றிய தனது ஊழியர்களில் அவசியமற்றவர்களை ஐநா.குவைத் எல்லைக்கு வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்தது.



ஈராக்கிய தலைநகர் பக்தாத்தில் உள்ள ஐ.நா. அலுவலகக் கட்டடத்தின் முன்பாக இடம்பெற்ற போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பும் ஈராக்கிய சிறுமி.

(ஓ)

# புற்றுநோய் பீடித்த கலங்களை அடையாளம் காட்டும் வினாகிரி

கேப்டவுண்,மார்ச் 11

புற்றுநோய்த் தாக்கத்தை கண்டு பிடிப்பதற்கு வினாகிரியைப் பயன்படுத்தும் முறையினை தென்னாபிரிக்க மருத்துவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.



புற்றுநோய் கலம்

குறிப்பாக பெண்களின் கருப்பையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பகுதியை வினாகிரி இனங்காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கருப்பையை வினாகிரியால் கழுவும்போது புற்றுநோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ள கலங்களை அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வினாகிரியில் தண்ணீரும் 5 சதவீத அசிட்டிக் அமிலமும் அடங்கியுள்ளன. இந்தக் கரைசல் கருப்பையினுள் செலுத்தப்படும் போது, இதில் நனையும் கலங்களில் புற்றுநோய்ப் பாதிப்புக்குட்பட்ட கலங்கள் வெள்ளை நிறமாகத் தோன்றுவது அவதானிக்கப்பட்டது. தற்போது 'பப்சிமியர்' முறை மூலமே புற்றுநோய்க் கலங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

இதில் ஆய்வுகூடப் பரிசோதனை மூலமே புற்று நோய்க் கலங்கள் அடையாளப் படுத்தப்படுகின்றன. ஆனால், வினாகிரி மூலம் கண்டு பிடிக்கும் தற்போதைய முறை மருத்துவ மனையில் தாதியொருவரால் உடனடியாக முடிவு தெரிவிக்கக் கூடியதாகும். இம்முறை அங்கீகரிக்கப்பட்டால் ஏழை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெரிதும் வரவேற்பைப் பெறும் என்று நம்பப்படுகிறது.

## 20 ஆண்டுகள் போராடி

# சவூதி அரச குடும்பத்தினரிடம் நியாயம் பெற்ற முன்னாள் மருமகள்

லொஸ்ஏஞ்சல்ஸ்,மார்ச் 11

சவூதி அரேபிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவரான இறந்து போன ஷேக் முகம்மது அல்பஸியின் முன்னாள் மனைவி தினாவுக்கு சவூதி அரேபிய மன்னரும் அவரது குடும்பத்தாரும் ரூபா 2000 கோடிக்கும் மேலாக வழங்கவேண்டும் என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

20 ஆண்டுகளாக சட்டப் போர் நடத்தி, தினா இந்தத் தீர்ப்பை பெற்றுள்ளார்.

ஷேக் முகம்மது அல்பஸியும் தினாவும் 1983 ஆம் ஆண்டு பிரிந்து விட்டனர். தினாவுக்கு ரூபா 800 கோடி வழங்க அப்போது உத்தரவிடப்பட்டது. ஆனால், அதனை அல்பஸி வழங்கவில்லை. அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் தினா மேன் முறையீடு செய்தார். அங்கும் அவருக்கு சாதகமான தீர்ப்புக் கிடைக்கவில்லை.

இதனிடையே, தனக்கு தருமாறு முன்னர் உத்தரவிடப்பட்ட தொகை வட்டியுடன் ரூபா 21 கோடிக்கும் மேல் ஆகிவிட்டது என்றும் -

அதனை சவூதி அரச குடும்பத்தார் தரக் கடமைப்பட்டவர்கள் என்றும் தினா கடந்த 2001 ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கில் லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் அவருக்கு சாதகமான தீர்ப்பை இப்போது வழங்கியுள்ளது. முகம்மது அல்பஸி கடந்த டிசெம்பர் மாதம் இறந்துவிட்டார். அவர் தனது சொத்துக்களை மன்னர் ஃபத் உள்ளிட்ட சவூதி அரச குடும்பத்தாருக்கு மாற்றிவிட்டார் என்று தனது வாதத்தில் தினாவின் சட்டத்தரணி மா்வின் மிட்செல்சன் குறிப்பிட்டார். (ஓ)

## இந்தியாவுக்கு ஆயுதபாகம் அனுப்பியவர்கள் கைது!

பெர்லின்,மார்ச் 11

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக ஆயுத பாகங்களை ஏற்றுமதி செய்ததாக, ஜேர்மனியில் இரண்டு தொழில் அதிபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களது பெயர்கள் வெளியிடப்படவில்லை. ஜேர்மனியின் ஏற்றுமதிச் சட்டங்களை மீறியதாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1997 முதல் 2000 ஆம் ஆண்டு வரை 9 முறை ஹைட்ராலிக் சிலிண்டர்களை இந்தியாவுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்திருப்பது தெரியவந்துள்ளது. பாலம் கட்டும் வாகனங்களுக்கான கருவிகள் என்ற பெயரில் அவர்கள் இவற்றை ஏற்றுமதி செய்துள்ளனர்.

இந்தியாவின் அக்னி ஏவுகணையில் இந்த ஹைட்ராலிக் சிலிண்டர்கள் பயன்படுத்தக் கூடியவை என்று தெரிந்தே அவற்றை அவர்கள் ஏற்றுமதி செய்துள்ளனர் என்று ஜேர்மனி பொலீஸார் தெரிவித்தனர்.

(ஓ)

# அயோத்தியில் ராமர் கோவில் இருந்ததா? தொல்பொருள் ஆராய்ச்சி தொடங்கியது!

அயோத்தி,மார்ச் 11

இந்தியாவின் அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடம், தங்களுக்குத்தான் சொந்தம் என்று விசுவ இந்து பரிஷத்தும், பாபர் மசூதிக் குழுவும் உரிமை கொண்டாடி வருகின்றனர். இது தொடர்பான வழக்குகளை அலகாபாத் நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

சர்ச்சைக்குரிய இடத்தில் இந்துக் கோயில் ஏதேனும் இருந்ததா? இல்லையா என்பதைக் கண்டறிய அங்கு நிலத்தைத் தோண்டி ஆய்வு நடத்துமாறு தொல்பொருள்துறைக்கு நீதிமன்றம் கடந்த 5 ஆம் திகதி உத்தரவிட்டது. ஒரு மாதத்தில் ஆய்வுப் பணியை நடத்தி முடித்து அறிக்கையைத் தாக்கல் செய்யும்படியும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதையடுத்து பி.ஆர்.மணி தலைமையிலான தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அயோத்தி சென்றனர். அந்தக் குழுவில் மொத்தம் 12 நிபுணர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் இந்தியா முழுக்க பல்வேறு இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்து நன்கு அனுபவம் பெற்றவர்கள்.

நேற்று திங்கட்கிழமை அவர்கள் அயோத்தியில் தங்களது ஆய்வுப் பணியைத் தொடங்கினார்கள். சர்ச்சைக்குரிய நிலத்தின் ஒரு பகுதியில் நேற்றுப் பள்ளம் தோண்டப்பட்டது. மணல் குவியல்கள் அருகில் உள்ள பகுதிகளில் குவிக்கப்பட்டன.

புராதனப் பொருள்கள் ஏதேனும்

உலக அரங்கில்

கிடைத்ததா என்பது உடனே அறிவிக்கப்படவில்லை. கோவில் தொடர்பான கலைப்பொருள்கள் ஏதேனும் கிடைத்தால் அவற்றைப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலத்தை தோண்டும் பணிக்கு ராமஜென்ம பூமி இயக்கம் மற்றும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. எனவே, ஆய்வுப் பணி நடக்கும் இடத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மத்திய பொலீஸ் படையின் இரு பிரிவுகளும், மத்திய பாதுகாப்புப் படையின் 3 பிரிவுகளும் அங்கு குவிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு கையகப்படுத்தியுள்ள இடங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுப்பணி நடக்கும் இடம் அருகே வந்து பார்க்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. பிறர் யாரும் பள்ளம் தோண்டும் பகுதிக்கு வராமல் இருப்பதற்காக தொல்பொருள் துறையினருக்கும் பள்ளம் தோண்டும் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதையும் மீறி மற்றவர்கள் ஊடுருவி விடக்கூடாது என்பதற்காக ஆய்வுப் பணி நடக்கும் இடத்துக்கும், தற்காலிக இராமர் கோவில் இருக்கும் இடத்துக்கும் இடையே மனிதச்சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றாலும் இராமர் கோவிலில் வழிபாடு செய்ய வந்த பக்தர்கள் யாரும் தடுக்கப்படவில்லை.

வழக்கம்போல நேற்று தற்காலிக இராமர் கோவிலில் பூஜைகள் நடந்தன.

# வடகொரியாவில் மீண்டும் ஏவுகணை பரிசோதனை

பியொங்கியாங்,மார்ச் 11

கடந்த இரண்டு வாரங்களில் இரண்டாவது தடவையாக வடகொரியா ஏவுகணைப் பரிசோதனையை நேற்றுத் திங்கட்கிழமை நடத்தியுள்ளது.



கடலில் நடத்தப்பட்ட இச் சோதனை வெற்றியடைந்துள்ளதாக வடகொரிய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது.

தென்கொரியாவின் புதிய அதிபராக ரோ மூ கியுன் பதவியேற்ற கடந்த மாதம் 24ஆம் திகதி நீண்டகாலத்தின் பின்னர் பகிரங்கமாக வடகொரியா ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியிருந்தது.

வடகொரியாவின் அணுஆயுத பரிசோதனை குறித்து அமெரிக்கா கடும எதிர்ப்பு வெளியிட்டுவருகிறது. இந்த நிலையில் அணுத்திட்டம் தொடர்பாக வடகொரியாவுடன் அமெரிக்கா பேச்சு நடத்துவதற்கு அழுத்தம் தரும் நடவடிக்கையாகவே வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் கருதப்படுகின்றன.

நேற்று நடத்தப்பட்ட சோதனையில் வடகொரியாவின் சின்சஷி கடற்கரையோரத்தில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை சுமார் 110 கிலோ மீற்றர்கள் தொலைவு சென்று கடலில் இலக்கைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

தமது அணுஆயுதச் சோதனைத் திட்டம் குறித்து தம்முடன் அமெரிக்கா பேச்சு நடத்த வேண்டும் என்று வடகொரியத் தலைமை கோரி வருகிறது. ஆனால், வடகொரியா அணு பரிசோதனைத் திட்டத்தை முற்றாகக் கைவிட வேண்டுமென்று அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது.

(ஓ)

## முன்னாள் அதிபருக்கு பிடியாணை

லிமா,மார்ச் 11

தென் அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டின் முன்னாள் அதிபர் பியு ஜிமோரி, ஆட்சியில் இருக்கும்போது தனக்கு எதிரான போராட்டத்துக்கு பயந்து ஜப்பானுக்கு ஓடிவிட்டார். அவரைக் கைது செய்து ஆஜர்படுத்தும்படி சர்வதேச பொலீஸிடம் கேட்கப்பட்டிருந்தது.

## காதலுக்கு விலை உண்டு!

காதலுக்கு விலை இல்லை. ஆனால், முறிந்து விட்ட காதலுக்கு விலை உண்டு. சீனாவின் பாலிங் பகுதியைச் சேர்ந்த இளம்பெண் ஜோசியாஜுன் அதே பகுதியைச் சேர்ந்த வாலிபர் மாலியாங்கை பல வருடங்களாக காதலித்தார். காதல் மயக்கத்தில் நூற்றுக்கணக்கான கடிதங்களை காதலர் அனுப்பி இருந்தார்.

இப்போது காதல் முறிந்து விட்டது. காதலர் எழுதிய கடிதங்களை தெருவில் நின்றபடி கூவி விற்று விட்டார் காதலி. ஆபாசமாகவும், அதில் வார்த்தைகள் இருந்தன. நல்ல விலை கிடைத்தது. இதை அறிந்த முன்னாள் காதலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். காதல் கடிதங்களை விற்ற காதலிக்கு 1000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயந்திரம், பற்றி, புதிய டயர்களுடன் EY தொடர் இலக்கமுடைய A40 வான் விற்பனைக்கு உள்ளது. விவரங்களுக்கு: V.மார்க்கண்டு (மாங்காய்), 1/7, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (15475)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் மத்தியில், கல்வயல் வீதியில் அண்ணளவாக 23 பரப்பு, 6 பரப்பு, 5 பரப்பு விஸ்தீரணமுள்ள மூன்று காணிகள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. (பகுதியாகவும் விற்கப்படும்). தொடர்பு: S.சிவரூபன், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம். (15202)

### சாவகச்சேரியில் குழந்தைகள் கிளினிக்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மக்களின் நலன் கருதி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் நுணாவிலில் குழந்தைகள் கிளினிக்கை நடத்தவுள்ளனர்.

மாதத்தின் மூன்றாவது செவ்வாய்க்கிழமைகளில் நுணாவில் கிராம அலுவலர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் இந்த கிளினிக் நடைபெறும். இத்தினத்தில் மீசாலை ஐயா கடையடியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் குழந்தைகள் கிளினிக் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### திருமதி அல்வின் ராகிலா

திருமதி அல்வின் ராகிலா அவர்கள் இன்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை தன்னுடைய 50 ஆவது பிறந்த நாளை 60/4, சொலமன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்புக் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மேலும் பல சிறப்புகளையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*60/4, சொலமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15494)

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**

## யா/புனித றோக்ஸ் றோ.வித்தியாலயம்
## இல்ல மெய்வன்மைத் தேர்வு - 2003

இன்று (11.03.2003) நடைபெறும் என அறிவிக்கப்பட்ட எமது வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் தேர்வு, தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று நடத்தவுள்ள அடையாள வேலை நிறுத்தம் காரணமாக நாளை (12.03.2003) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(15499) - பாடசாலைச் சமூகம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது கழகப் பொருளாளர் லயன் சி.குலசிங்கத்தின் தந்தையாரான கரவெட்டி புலவரோடையைச் சேர்ந்த

### நாகப்பர் சின்னத்தம்பி

06.03.2003இல் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

(C-26881) - வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவப்பிரகாசம்

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 91/2,அரசடி வீதியை (தஞ்சி லேன்) வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் (குளியாப்பிட்டிய) கந்தையா சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று(10.03.2003) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சொர்ணலட்சுமியின் அன்புக் கணவரும் செந்தினி (ஜேர்மனி), திருலோகசங்கர் (பிரான்ஸ்), கௌரி மனோகரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஹரிராமஜெயம் (ஜேர்மனி), சந்திரமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இலட்சுமி, கோபாலப்பிள்ளை, சண்முகம், மனோன்மணி மற்றும் சதாசிவம், தியாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜேர்மனியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன், எனஸ்ட், எமிலினி ஆகியோரின் அன்புப் பேரனும் கனகம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.03.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91/2, அரசடி வீதி,**
**கஞ்சி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (15403)

தகவல்:
**மனைவி, மகள்.**

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### தினம் ஒரு பரிசு - 30

நாளை (12.03.2003) நடைபெறவுள்ள ஸிம்பாப்வே - கென்யா ஆட்டத்தில் எந்த அணி வெற்றியீட்டும்.

முழுப்பெயர் : ........................................

முகவரி : ........................................

அ. அட்டை எண்: ........................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (12.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 30, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயன்**

'அருண்ஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்



முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்

SuperSix பரிசு
ஜுமானா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்



3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

### மாபெரும் இறுதிப் போட்டி

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ........................................

முகவரி : ........................................

அ.அட்டை எண்: ........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# 'அம்மைநோய்' கோழிகளை கூண்டோடு காவு கொள்ளும்

**கோழி** வளர்ப்பதென்பது எவ்வளவு தூரம் இலாபகரமானதாக அமையும் என்பதைப் பல்வேறு காரணிகள் தீர்மானித்தாலும் கோழி நோய்கள் மிகக் கூடியளவில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. சில நோய்களின் தாக்கத்தினால் பண்ணையிலுள்ள அனைத்துக் கோழிகளும் இறந்துவிடக் கூடிய நிலை ஏற்படுகின்றது. எனவே கோழிகளைத் தினந்தோறும் தவறாமல் உற்றுக் கவனித்து வரவேண்டும். எவ்வளவு விரைவாகக் கோழிகள் நோயினால் பாதிக்கப்பட்டதை உணர்ந்து கொள்கிறோமோ அந்தளவிற்கு நோயினால் ஏற்படக்கூடிய இழப்பினைப் பெரும்பாலும் குறைத்துவிட முடியும்.

கோழிகளைப் பாதிக்கும் நோய்கள் பக்றீரியா, வைரசுக்கள், பங்கசு, Mycoplasma, உள்ளுறை (Internal), வெளியுறை( Extemal) ஒட்டுண்ணிகளால் ஏற்படுகின்றன.


**பரமன்**
தகவல் தொடர்பு மையம்
விவசாயபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


கோழி அம்மையானது (Fowl pox) வைரசுவினால் ஏற்படுத்தப்படும் ஒரு நோயாகும். வைரசு நோய்கள் கோழிகளைத் தாக்கிய பிறகு இவற்றை மருந்தினால் குணப்படுத்துவது இயலாத காரியம். எனவே வரும்முன் காக்கும் நடவடிக்கையான தடுப்பூசி போடுவதே சிறந்ததாகும். இப்பகுதியில் கோழியம்மையும் அதன் தடுப்பு முறைகளையும் பற்றி ஆராய்வோம்.

கோழியம்மையானது தோல் பகுதியைத் தாக்கக்கூடிய வைரசு நோயாகும். இது கோழி, புறா, வான்கோழி, என்பனவற்றிலும் நோயை ஏற்படுத்துகின்றது. இந்நோயானது வயது வரம்பின்றி எல்லாக் கோழிகளையும் தாக்கும். குஞ்சுகளுக்கு இந்நோய் காணுமானால் பெரும்பான்மையானவை இறந்துவிடும். பொதுவாக 60 - 65% கோழிக்குஞ்சுகள் இறப்பைக் காட்டும். பருவக் கோழிகளை நன்கு பராமரிப்பதன் மூலம் ஓரளவிற்கு இறப்பைக் கட்டுப்படுத்தலாம்.

இந்நோய் கோழிகளின் உணவு மூலமும் கொசுக்கள் மற்றும் ஏனைய பறவைகளாலும் பரப்பப்படுகின்றன. நம்நாட்டில் நவம்பர் பிற்பகுதியிலிருந்து மேமாதம் வரையில் இந்நோய் வேகமாகப் பரவுகின்றன.

**பொதுவான அறிகுறிகள்**

ஆரம்பத்தில் கோழியின் கொண்டை, தாடிகள்(Wattles), முகம் முதலிய இறகுகள் வளராப் பகுதிகளில் சிறு கொப்புளங்கள் தோன்றும்.

பின்னர் மேற்கண்ட கொப்புளங்கள் நாளடைவில் சுருங்கி கறுத்துப் பருக்கள் (Wart-leke nodules) போன்றும், பக்குகள் (Scabs) போன்றும் மாறிவிடும். இவற்றை நீக்கினால் அடித்தோல் இரத்தக் கசிவோடு சிவந்து காணப்படும்.

கோழிகளின் இறக்கையின் அடிப்புறம் கொண்டை, தாடி, அலகின் உட்புறம், குடற்பகுதி ஆகியவற்றின் மேற்பகுதி அணுக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வேகமாகவும், தடிப்பாகவும் வளர்ச்சியடைந்து பிறகு உதிர்ந்துவிடும்.

முட்டைக்கோழிகளில் இந்நோயின தாக்கததினால் முட்டையுற்பத்தி பாதிக்கப்படும். உதாரணமாக கிளிநொச்சியில் காணப்பட்ட விவசாய பீடத்திற்கு சொந்தமான பண்ணையொன்றில் இந்நோயின் தாக்கத்தினால் 30 - 80%மான முட்டை



உற்பத்தி பாதிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சி 4கிழமைகளுக்கு நீடித்து பின்னர் 4கிழமைக்குள் வழமைக்குத் திரும்பியது.

மூன்று வகையான கோழியம்மை, கோழிகளைத் தாக்குகின்றன.

★ கொண்டை, கண் இமைகளைத் தாக்கும் வகை,

★ வாயின் உட்புறம் வெண் தோல் படரும் வகை,

★ கண், முக்கு பகுதிகளைத் தாக்கும் வகை.

வாயின் உட்பகுதியும், மூச்சுக் குழலும் வெள்ளைத் தோலினால் அடைக்கப்பட்டு கோழிகள் மூச்சுத் திணறி இறக்கக்கூடும்.

கோழிகளின் கண்ணிமையில் அம்மை நோய் தோன்றினால் கோழிகள பார்வையை இழந்து விடுகின்றன. தீனி, குடிநீர் உட்கொள்ள முடியாமல் பட்டினி கிடந்தே இறந்துவிடும்.

சில சமயங்களில் கடைவாய் ஓரங்களிலும், தொண்டையிலும் இளமஞ்சள் நிறக் கழிவோடு (Cheedsy deposits) கூடிய திட்டுக்கள் காணப்படும். இவற்றை நீக்கினால் அடியில் சிவந்த நிறத்துடன் இருப்பது தெரியவரும். இவற்றுடன் உடல் வெப்பநிலையும் அதிகரிக்கும்.

பருக்கள் இரண்டு அல்லது மூன்று வார காலத்தினுள் உதிர்ந்து விடும் அல்லது பாதிக்கப்பட்ட கோழிகளின் மேல் அலகுகள் இணையும் இடத்தில் வெள்ளையாக தோல் போன்று ஒரு திரை உண்டாகும்.

**தடுப்பு முறைகள்**

நோய் வரும் முன் காப்பதே சிறந்ததாகும். முதற் தடுப்பூசி 3ஆம் வாரப்பகுதி வயதிலும் மீள் தடுப்பூசி 12 - 16ஆம் கிழமை வயதிலும் போட வேண்டும். இறக்கையின் (Foucle) நோய் ஏற்பட்ட கோழிகளுக்கு தடுப்பூசி இடுவது பிரயோசனமற்ற செயலாகும்.

உறைநிலையில் உலர்த்தப்பட்ட (Freezed dried) தடுப்பூசி மருந்தே சிறந்ததாகும்.

நோய் ஏற்பட்ட கோழிகளைத் தனிமைப்படுத்த வேண்டும். அவை இறக்க நேரிட்டால் ஆழ்குழியினுள் புதைப்பதோ அல்லது அவற்றை எரியூட்டி அழிப்பதோ நன்றாகும். மற்றைய கோழிகளுக்கு உடனடியாகத தடுப்பூசி வழங்கவேண்டும்.

ஆரம்ப நோய் நிலையில் எமது வீடுகளில் பாவனையிலுள்ள தேசிக்காய்க் கோதினைக் கொண்டு கொப்பளம் போலத் தோன்றும் இடங்களில் தேய்க்கலாம். அத்துடன் கொப்பளங்கள் உள்ள பகுதிகளை அயடீன் கரைசலால் துடைத்து விடலாம்.

தொற்று நோய் பரவாமலிருக்க உணவுக்கலன், நீர்கலன் என்பவற்றைச் சுத்தமாகப் பேணவேண்டும். சுகாதாரமான பண்ணைகளில் தொற்றுப் பரவலைத் தடுக்கலாம். ★

## சீருடைத்துணி வந்து சேரவில்லை

அரியாலை,மார்ச்11

பாடசாலை மணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் யாழ்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வந்து சேர்ந்ததும் அவை உடனடியாக சங்கக் கிளைகள் ஊடாக மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது பிரதேச கிராம சேவையாளர் பிரிவில் இயங்கும் சங்கத்தின் கிளைகளுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய இலவச சீருடைத் துணிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது இந்த சீருடைத் துணிகள் சங்கத்திற்கு வந்து சேராததால் மாணவர்கள் சங்கத்திற்கு வந்து சிரமப்படவேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. (எ-17)

## இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பதே மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாகும்

### தமிழக அமைச்சர் அன்வர் ராஜ் தெரிவிப்பு

இராமநாதபுரம்,மார்ச்11

முதல்வர் ஜெயலலிதாவின் கருத்துப்படி கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்பதன் மூலமே தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்று தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அ.அன்வர்ராஜ் தெரிவித்தார்.

தமிழகத்தில் மகளிர்தின விழா ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

கருணாநிதியால் தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை இலங்கையிடமிருந்து திரும்பப் பெறுவதன் மூலமே நமது மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றார் ஜெயலலிதா. இதை நிறைவேற்றுவதன் மூலமே தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். அல்லது மீன்வளம் மிக அதிகம் காணப்படும் கச்சதீவுப் பகுதியில் நமது மீனவர்கள் மீன் பிடிக்க வசதியாக நீண்டகாலக் குத்தகை உரிமத்தைப் பெற மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டும். இதற்கான முயற்சிகளை இந்திய மற்றும் இலங்கை அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கொல்கத்தா பகுதி மீனவர்களுக்கும் வங்களாதேச மீனவர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டது.

இப்பிரச்சினையைத் தீர்க்க நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க உரிமம் வழங்கப்பட்டது. அதைப்போல கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க உரிமம் பெற்றுத்தர மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர். (எ)

## 'மாவிலைத்தத்தி' பூச்சியை அழியுங்கள்: அன்றேல் ருசியான மாம்பழம் கிடையாது

தற்போது மாமரங்கள் துளிர்விட்டு பூக்கும் காலமாகும். இக் காலத்திலேயே 'மாவிலைத் தத்தி' பூச்சியின் தாக்கம் அதிகளவில் ஏற்படும். அதனைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்குகின்றது இக்கட்டுரை.

இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டின் இயற்கையான மண்வளமும், காலநிலைச் சுவாத்தியமும் இப்பகுதியில் உற்பத்தியாகும் பழவகைகளுக்கு நல்ல ருசியையும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும், கிராக்கியையும் பெற்றுத் தருகின்றன.

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் போன்ற பல்வேறுவகைப்பட்ட பழவர்க்கங்கள் நல்ல விளைவு கண்டு, யாழ்ப்பாண மக்களுக்கு வருமானங்களையும் தேடிக்கொடுக்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்து மாம்பழங்கள் நல்ல ருசிமிக்கவை. கறுத்தக்கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விலாட்டு, அம்பலவி, சேலம், கற்கண்டு என ஒவ்வொரு வகையான மாம்பழங்களும் வெவ்வேறு வகையான ருசிகளையும் தனித்துவத்தையும் கொண்டவை.

கடந்த சில ஆண்டுகளாக எமது பாரம்பரியமான பெருமைமிக்க இப் பழவகைகளின் உற்பத்தி அருகி வருவதாகத் தெரிய வருகின்றது. அநேகமான பழ மரங்கள் தற்போது காய்ப்பது குறைவடைந்து காணப்படுகிறது.

குறிப்பாக மாமரங்கள் போதிய ளவு காய்க்காமையால் நல்ல மாம்


**வி.பி.சர்மா**
வலி.தெற்கு செய்தியாளர்


பழங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் இப் பூமியில் இடம்பெற்ற போரின் தாக்கங்கள், அதன் விளைவாக மண்ணில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நீரில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் பூச்சிகள், வண்டுகளால் ஏற்படும் தாக்கங்கள் எனப் பல காரணங்களை பழ உற்பத்திக் குறைவுக்கு காரணங்களாகக் கூறலாம்.

மாமரங்கள் பெரும்பாலும் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இலைகள் உதிர்த்து துளிர் விடுகின்றன. துளிர்விட்டு பூத்துக் காய்த்து மே மாதமளவில் நல்ல மாம்பழங்களை பெற்றுக்கொள்ள முடிகிறது.

'மாவிலைத்தத்தி' என்னும் பூச்சித




தாக்கத்தால் மாமரங்களில் நிறைய பூக்கள் இருப்பினும் அவை பிஞ்சுகளாகி காய்க்கத் தவறுகின்றன.

மாமரங்கள் நன்றாகப் பூத்திருக்கும் காலங்களில் அதன் அருகே நாம் செல்லும் போது "ஙொய்" என்றொரு சப்தத்தை அவதானிக்கலாம். அது மாவிலைத் தத்திகளின் சப்தமாகும். மாந்துளிர்கள், மாம்பூக்கள் என்பவற்றை இப்பூச்சிகள் அரித்து விடுவதனால் மாங்காய்களின் உற்பத்தி குறைவடைகின்றது.

மாவிலைத்தத்திகளை அரம்பத்திலேயே ஒழித்தால்தான் தரமான மாம்பழங்கள் அதிக அளவில் கிடைக்கும்.

மாவிலைத்தத்திகளை ஒழிக்க சிறந்த கிருமிநாசினி "லேப்சிட்" என்பதாகும். இம்மருந்தை மாமரம் துளிர்விடும் காலங்களில் தெளிக்க வேண்டும். மரம் முழுவதும் செறியக் கூடியதாக இவற்றைத் தெளிக்க வேண்டும். இம்மருந்து மாவிலைத் தத்திகளை மட்டுமல்ல ஏனைய பூச்சிகள், வண்டுகளையும் அழித்து விடுகின்றது. மாமரங்கள் துளிர்த்துப் பூத்தபின்னர் கிருமிநாசினியை தெளிப்பது பயன்தர மாட்டாது.

தற்போது வீட்டு மாமரங்கள் யாவும் துளிர் விடுகின்றன. இக்காலங்களில் மாமரங்களுக்கு இம் மருந்தை தெளிப்பதால் நல்ல பலனைப் பெற முடியும்.

இம்மருந்து வகைகளும், தெளிகருவிகளும் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் உள்ளன. மாமர சொந்தக்காரர்கள் கமநல கேந்திர நிலைய விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு மருந்தை தெளிக்க முடியும்.

மருந்து தெளிப்பதன் மூலம் தரமான ருசியான அதிகளவு மாம்பழங்களை நாம் பெற்றுக்கொள்ள முயல்வோம். ★

**வாசகர்களுக்கு!**

குடாநாட்டு விவசாயச் செய்கை தொடர்பான தரமான ஆக்கங்கள் விவசாயிகளிடமிருந்தும் துறை சார்ந்த நிபுணர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன.

குடாநாட்டு விவசாயிகளின் பிரச்சினைகள், பயிர்ச்செய்கை பாதுகாப்பு, பயிர்ச்செய்கையில் நவீன தொழில்நுட்பமுறைப் பிரயோகம், புவியியல் மாற்றங்கள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதாக கட்டுரைகள் அமைய வேண்டும்.

தரமான ஆக்கங்கள் 'கமமும் புலமும்' பகுதியில் வாராந்தம் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

## வாழ்வை அர்த்தமாக்குவோம்

"சோதனைகளை மனஉறுதியுடன தாங்குபவன் பேறுபெற்றவன் இதனால் அவனது தகைமை எண்பிக்கப்படும்."

இறைவனுக்காக, திரண்டு வரும் பேரிடரை மனஉறுதி கொண்டு தாங்கிப் போமாகில் அதுவே நம்மை தாங்கிச் செல்லும் பாலமாக இருக்கும். அவருக்காக நாம் எதை இழக்கத் தயாராக இருக்கின்றோமோ, அதை இறைவனே நமக்கு பலமடங்கு தருகிறார். அருளின் காலமாகிய இத் தவக்காலம் சிலுவைப் பழுக்களை விரும்பி

**தவக்காலச் சிந்தனை**
**-ஏழாம் நாள்-**

சுமக்க அழைக்கும் காலம். பரமன் யேசு பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவும் பலரின் மீட்புக்கு, விலையாக தம் உயிரை அழிக்கவும் வந்தார்.

நிறைந்த மனதுடன், தியாக உணர்வுடன் எம் அனைவரின் பாவப் பழுவை தம்மேல் சுமந்து மீட்பினைப் பெற்றுத் தந்தார். அன்று ஆபிரகாம் தம் ஒரே மகனை இழக்க எவ்வாறு நம்பிக்கை கொண்டு துணிந்தார். ஆபிரகாம் தொடங்கி கிறிஸ்து வரை வாழ்விற்கு வழியமைத்தது துன்பங்களும் துயரங்களும் தான். இவை தான் சாதனைக்கு வழி அல்லவா? தீமைகள் இறைவனிடம் இருந்து வருவதில்லை. ஒவ்வொரு வரும் தம் சொந்த தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர். அவ்வேளையில் சாத்தான் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்தி, கவர்ந்து, மயக்கி தன் வயப்படுத்துகிறான்.

எனவே துன்பங்கள் நமக்கு எவ்


செ.பிறின்ஸ்லி


வகையிலும் தடையல்ல. உறுதியுடன் தாங்கி மீட்பினை மகிழ்வுடன் அனுபவிக்க நாம் எங்கேனும் எண்ணி, எனவே அதன் வழி பயணித்து நம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 - 01 - 1939　　மறைவு 07 - 03 - 2003

## அமரர் அம்பலவாணர் நடேசன்

*(முன்னாள் இ.போ.ச. நடத்துநர்)*

*காற்றோடு வந்த செய்தி கனவெனவே போகாதோ!*
*கலங்கி வாடுகிறோம் உமைக்கண்ணீரில் தேடுகின்றோம்*
*ஏற்றமுற எமை வளர்த்து இன்று எட்டாத தூரம் சென்றாயோ?*
*பண்பில் தலைவனாய், பாசத்தில் தந்தையாய், அரவணைப்பில்*
*நற் சகோதரனாய் ஊரோடு உறவாடி*
*உத்தமனாய் வாழ்ந்தீரோ?*

07.03.2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*　　(15497)　　- உறவினர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 06.06.1981　　உதிர்வு 06.03.2003

## விநோதினி திலீபன்

06.03.2003 அன்று அகாலமரணம் அடைந்த
'சுடர் ஒளி', 'உதயன்' நிறுவனங்களின் விளம்பரப்பகுதி ஊழியர்
விநோதினி திலீபன் அவர்களுக்கு
எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன்
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
'உதயன்', விளம்பரப்பகுதியினர்.

## புளகாங்கிதமடைகிறோம்

எமது ஒன்றிய உறுப்பினர்களான
**திரு. பாலசிங்கம் பாலதாஸ்**
அவர்கள் உதவி நிதியாளராக, கிழக்கிலங்கை பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்திற்கும்
**திரு. செல்வலிங்கம் திருவருட்செல்வன்**
அவர்கள் உதவி உள்ளகக் கணக்காய்வாளராக கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திற்கும் பதவி உயர்வு பெற்றுச்செல்வதையிட்டு புளகாங்கிதமடைகின்றோம்.

(சி-26886)　　யாழ்ப்பாண பல்கலைக்கழக எழுதுநர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்.

## பாம்பீச் ரெஸ்றோரன்ட்

அனுபவம் வாய்ந்த இத்தாலிய நாட்டவர்களால் தயாரிக்கப்படுகின்ற "பிக்ஸா" வகைகள்

| | |
|---|---|
| *Chicken* | - சிக்கின் |
| *Prawns* | - புறோன்ஸ் |
| *Sea-Food* | - கடல் உணவு வகைகள் (மீன், இறால்) |
| *Vegetable* | - மரக்கறி |

எந்நேரமும் ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

*பாம்பீச் ரெஸ்றோரன்ட்*
*49, ஸ்ரான்லி வீதி,*
*(முட்டாஸ் கடைச் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்.* (C/26885)　　முகாமையாளர்.

## கட்டடக் கலைஞர் தேர்விற்கான வழிகாட்டல் வகுப்புகள்

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலை கற்பதற்கு விண்ணப்பித்த மாணவர்களை அனுமதித் தேர்விற்கு தயார்ப்படுத்துவதற்கான வழிகாட்டல் வகுப்புகள் Mouse நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில்வரவும்.

*Mouse*
*K.K.S. வீதி,*
*இணுவில்.*　　(15401)　　கு.பதீதரன் (குரு) கட்டடக் கலைஞர்

## ஹொட்டல் வேலையில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை

கீழ்க்காணும் வேலைகளுக்கு அனுபவம்வாய்ந்தவர்கள் தேவைப்படுகிறார்கள்

1) உணவு பரிமாறுபவர்கள் (Waiters)
2) சமையல் உதவியாளர்கள் (Kitchen Helpers)
3) பாத்திரங்கள் சுத்திகரிப்பவர்கள் (Dish Washers)
4) வாகன ஓட்டுநர்கள் (அனுபவம்வாய்ந்தவர்கள்) (Experienced Vehicle Drivers)

12.03.2003 இல் இருந்து 25.03.2003இற்குள் நேரில் வந்து சந்திக்கவும்
*(சந்திக்கும் நேரம் - காலை 9.00 மணி - 12.00 மணிவரை)*

**பாம்பீச் ரெஸ்றோரன்ட்**
49, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடைச் சந்திக்கு அருகாமையில்)　　முகாமையாளர்　　(C/26884)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன்
செல்லத்துரை கார்த்தீபன் அவர்களின்
சகோதரன்
**செல்லத்துரை மோகனப்பிரதீபன்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

Fussels lane,
Colombo - 06
T.P. 01 559349　　(15410)　　தகவல்: பிறைசூடி குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 05 - 1940　　மறைவு 22 - 03 - 2002

## அமரர் இராசமணி கந்தையா

எம்மை எல்லாம் ஆளாக்கி அன்பின் இலக்கணமாய் பண்பின் சிகரமாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*22, புறூடி ஒழுங்கை,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*　　(15412)　　உங்கள் நினைவுடன் குடும்பத்தினர்.